# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 — விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, புரட்டாதி 15உ (1-10-72) ஞாயிறு 1391 ஷஃபான் 22 புத்தகம் 25 இதழ் 44


**அக்டோபர் 2-ல்**

- பாடசாலைகளைப் பகிஷ்கரிப்பீர்!
- கடைகள், தொழில் நிலையங்களை மூடி வைப்பீர்!!
- வேலைகளுக்கு செல்லாதீர்!!
- வீடுகளில் இருந்து பிரார்த்தனை செய்வீர்!!
- உதயசூரியன் கொடியை எங்கும் ஏற்றிடுவீர்!!!

## ஒத்துழையாமை இயக்கத்தின் முன்னேடியாக

# ஹர்த்தால்

## தமிழ்மக்களுக்குதமிழர்கூட்டணிவேண்டுகோள்!

கொழும்பு — செப் 28

தமிழினத்தின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கும் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் இனத்தின் அரசியல் பொருளாதார சமூக கலாசார வாழ்வை அமைத்துக்கொள்வதற்கும் செப்டம்பர் 30ம் திகதிக்குப்பின் சாத்விகப் போராட்டத்திலிறங்குவது என்று 25-6-72ல் கோப்பாயில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய தமிழர் கூட்டணி நடவடிக்கை யெடுத்துள்ளது.

இந்நடவடிக்கையின் முதலாவது அம்சமாக காந்தியடிகள் பிறந்த தினமான அக்டோபர் 2ம் திகதியிலிருந்து ஒத்துழையாமைப்போராட்டத்திலிறங்குமாறும், ஒத்துழையாமை இயக்கத்தின் முன்னேடியாக தமிழினத்தின் ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் எடுத்துக்காட்டும் முறையில் ஒரு பரிபூரண ஹர்த்தாலை அக்டோபர் 2ம் நாள் ஈழத் தமிழகம் முழுவதும் அனுட்டிக்கும் படியும் தமிழர் கூட்டணித்தலைவர்கள் தமிழ்தேசிய இனத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒத்துழையாமை இயக்கத்துக்கான திட்டங்கள் இவ்வார முடிவில் தமிழ் ஈழத்தின் தலைநகர்களில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பொதுமக்கள் முன் சமர்ப்பிக்கப்படும்.

அக்டோபர் 2ம் நாளில் கூட்டணிக்கொடியாகிய உதயசூரியன் கொடியை தமிழர்கள் தங்கள் இல்லங்களிலும், கடைகளிலும், படிப்பகங்களிலும், சிற்றூர்பேருரெங்கும் பறக்கவிடவேண்டுமென்றும் கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய ஐந்து மாவட்டத் தலைநகர்களிலும், தமிழ் கூட்டணியின் பொதுக்கூட்டங்கள் முறையே தந்தை செல்வா, எக்ஸ். எம். செல்லத்தம்பு, தா. சிவசிதம்பரம், சி. கதிரவேற்பிள்ளை, எம். சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமைகளில் செப்டம்பர் 30ம் நாள் நடைபெறவுள்ளன. இக்கூட்டங்களில் ஒத்துழையாமைப்போராட்டத்துக்கான திட்டங்கள் வெளியிடப்படவுள்ளன.

தமிழர் கூட்டணி பா. உ. ஒருவர் தமிழர் விடுதலைப் போருக்கு வலுவூட்டவும் ஆட்சியாளருக்கு தமிழ் மக்களின் எதிர்ப்பை எடுத்துக் காட்டுமுகமாகவும் தமது பதவியைத் துறப்பது பற்றி இக்கூட்டங்களில் அறிவிக்கப்படும்—

அக்டோபர் 2ம் நாள் நடைபெறவுள்ள ஹர்த்தால் பற்றி தமிழர் கூட்டணி சார்பில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"குடியரசின் பெயரால் தமிழினம் இதுகாறும் அனுபவித்துவந்த அரைகுறை உரிமைகளும் அபகரிக்கப்பட்ட மே 22 இல் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் அளிப்பதற்கு செப்டம்பர் 30 வரை ஆட்சியாளருக்கு அவகாசம் கொடுத்தோம்.

ஆனல் தமிழினத்தின் ஒன்றுபட்ட கோரிக்கையை உதாசீனம் செய்து இனத்தையே நிந்தை செய்துவிட்டது அரசாங்கம். இந்நிலையில் எம் உரிமைகளைப் பெறுவதற்கு அண்ணல் காந்தி காட்டிய அறவழியில் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஒத்துழையாமை சட்ட மறுப்பு ஆகிய வழிகளில் எமது போராட்டம் ஆரம்பமாகும். படிப்படியாக இயக்கம் விரிவாக்கப்படும்.

வேலை நிறுத்தங்கள், பொருளாதார நெருக்கடிகள் இவற்றின் மத்தியிலே அரசு இப்போது திணறிக்கொண்டிருக்கிறது. உரிய நேரத்தில் நேரடி நடவடிக்கையில் இறங்குவதற்கான அழைப்பு எமது மக்களுக்கு விடுக்கப்படும்.

அதற்கு முன்னேடியாக எமது ஒற்றுமையை உலகறிய எடுத்துக்காட்டுவதற்கும் போராட்டத்துக்கு எம்மைத் தயார் செய்யும் பொருட்டும் தமிழ் மக்களின் வழிபாட்டு நாளாக அண்ணல் காந்தி அவதரித்த அக்டோபர் 2ம் திகதியை அனுட்டிக்க எம் தலைவர்கள் தீர்மானித்திருக்கின்றனர் எனவே,


- பெற்றோர்களே! அன்று உங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாதீர்கள்!
- மாணவர்களே! அன்று எவரும் பாடசாலைக்கு செல்லாது வீட்டிலேயே இருங்கள்!
- வர்த்தகப் பெருமக்களே! தொழிலதிபர்களே! அன்றைய தினம், வியாபார நிலையங்கள் தொழில் நிலையங்கள், எல்லாவற்றையும் மூடி வையுங்கள்!
- தொழிலாளர்களே, சிப்பந்திகளே! அன்று தொழில் நிலையங்களுக்கு செல்லாதீர்கள்!

ஈழத் தமிழகத்தின் தன்மானத் தமிழ்க்குலமே! அக்டோபர் 2ம் திகதியை அமைதியான பிரார்த்தனை நாளாக இழந்த உரிமை பெற உரிமை பூணும் நாளாக தமிழ் இனத்தின் ஒற்றுமையை நிலைநாட்டும் நாளாக அனுஷ்டிக்குமாறு வேண்டுகிறோம்."

## "தமிழ் இளைஞர்கள் மத்தியில் பிரிவினை எண்ணம் வளர்வது உண்மை!"

## இரத்தினயகாவுக்குச் செல்வா பதில்!

"சிங்கள அரசியல் வாதிகள் தம்மை ஒருபோதும் சமத்துவமாகவும் நீதியாகவும் நடத்த மாட்டார்கள் என்ற கருத்து தமிழ் மக்களிடம் வளர்ந்துவருவது உண்மை. இந்நாட்டில் தமிழ் மக்கள் சுயமரியாதையுடன் வாழுவதற்குரிய ஒரே வழி தனியே பிரிந்து தனிஇராச்சியம் ஒன்றை அமைத்துக்கொள்வது தான் என்ற கருத்தும் தமிழ் இளைஞர்களிடையே வளர்ந்து வருகிறது"



— இவ்வாறு தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் மகாத்மா காந்தி சபைத் தலைவர் திரு. ஏ. இரத்னயகா எழுதிய கடிதமொன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. இரத்னயகா தந்தை செல்வாவுக்கு எழுதியிருந்த கடிதத்தில், வடபகுதி அரசியல் நிலைமை கவலையை அளிப்பதாக உள்ளதென தம்மிடம் பல முக்கிய பிரமுகர்கள் தெரிவித்ததாகவும் தமிழ் இளைஞர்களிடையே வளர்ந்து வருவதாகக் கூறப்படும் பிரிவினைக் கருத்து, இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் அளிப்பதாகவும் தெரிவித்திருந்தார். தேசிய ஒற்றுமையை காத்திட வேண்டும் என்ற ஆர்வமுள்ளவர்கள் இனியும் தாமதமின்றி இந்நிலைமையை மாற்றியமைக்க முயற்சிக்க

(7-ம் பக்கம் பார்க்க)

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பா. சிவபாலன்,
கொழும்பு-11.

கே: தமிழர் கூட்டணியின் அறப்போராட்டம் வெற்றிகரமாக முடிவடையும் நிலையில் எம் இனத்தைக் காட்டிக்கொடுத்த எட்டப்பர் கூட்டத்தின் நிலை என்னவாய் இருக்கும்?

ப: நிச்சயம் ரஸாக்கர்களுக்கு நேர்ந்தகதி மட்டும் நேராது — ஏனெனில் தமிழ் மக்கள் மன்னிக்கும் மனப்பான்மை கொண்டவர்கள்!

கே: தலைவர்களை சிறைப்படுத்திய பின்னரும் கூட்டணிப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுமா?

ப: தொடர்ந்து நடைபெறுவதும் நடைபெறுததும் இளைஞர்களின் கரங்களிலேயே இருக்கிறது.

ஃ

ச. குலேந்திரன்,
யாழ்ப்பாணம்.

கே: இலங்கையில் தமிழர்களுக்குத் தனிக்கொடி என ஈழத்து ஏடுகள் சிறிதாகப் பிரசுரித்தபோது, கடல் கடந்துள்ள தமிழக ஏடு ''தினத்தந்தி'' இவற்றிலும் பெரிதாக பிரசுரித்துள்ளதே இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தமிழ்நாட்டு மக்கள் ஈழத்தமிழர்களின் பிரச்சினையில் காட்டும் அக்கறையை பிரதிபலிக்கிறது!

ஃ

புவனேஸ்வரி சதாசிவம்
லோவர் வீதி,
பதுளை.

கே: விடுதலைப் போருக்கு பெண்கள் செய்யவேண்டிய உதவி என்ன?

ப: ஆண்களை உற்சாகப்படுத்தி விடுதலைப் போரில் கலந்து கொள்ளும்படி தூண்ட வேண்டும். இருக்கின்ற உற்சாகத்தையும் கெடுப்பவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது!

கே: எமது உரிமைப் போருக்கு இந்தியா உதவிக்கு வருமா?

ப: எம்மையே நாம் நம்புவோம்!

கே: உங்களை இலங்கை பிரதமராக நியமித்தால் என்ன செய்வீர்கள்?

ப: சிங்கள மக்களின் உரிமைகளை அவர்கள் கேளாமலேயே வழங்கிவிடுவேன்! நான் தமிழன் என்பதால் அவர்களது உரிமைகளைப் பறிக்கமாட்டேன்!

ஃ

வரதராசன்,
பாலதாசன்,
லோகிதாசன்
கண்டி.

கே: தளபதி அமிர் வெளிநாடு விஜயம் பற்றி பத்திரிகைகள் எல்லாம் முரண்பாடான கருத்தைத் தெரிவித்திருக்கின்றனவே — விளக்கம் தருவீர்களா?

ப: முரண்பாடுகளின் மொத்த உருவம்தானே — நமது இன்றைய நாளேடுகள்.

சி. பிரதாபன்,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

கே: குயுக்தியாரே, நீர் பிறந்த இடம் எது?

ப: நிச்சயம் உம்மைப் போல குரங்கிலிருந்து பிறக்கவில்லை...!

கே: நீர் பிறந்த காரணம்?

ப: உம்மைப்போன்றவர்களின் ஐயங்களைத் தீர்த்து வைப்பதற்கு!

கே: உமக்கு வெட்கம் ரோசம் உண்டா? தமிழ் காங்கிரசைத் திட்டித் தீர்த்துவிட்டு, அவர்களுடன் சேர்ந்துவிட்டீரே!

ப: அடிக்கிற கைதான் அணைக்கும்!

ஃ

க. குமாரகுருசாமி,
34, சாரதா வீதி,
திருகோணமலை.

கே: 'தமிழ்ச் சிங்கம்' என்று அருளம்பலத்தை அழைக்கலாமா?

ப: ஒரு சிறு திருத்தத்துடன் இப்படி அழையுங்கள் — தமிழ் (அ) சிங்கம்!

கே: அண்ணன் காசி ஆனந்தனின் முகவரி என்ன?

ப: D 111, வெலிக்கடை சிறைச்சாலை, பொறளை.

ஃ

ஜூ. ஜே. அலெக்ஸ்,
கொழும்பு-15.

கே: தமிழர் கூட்டணி அடுத்த மாதம் 2ம் திகதி ஆரம்பிக்கவிருக்கும் போராட்டத்தின் விளைவாக கிழக்கு மாகாணங்களில் தமிழர் தம்மைத் தாமே 'தனிநாடு' அமைப்பதன் மூலமாகவோ அல்லது 'சுயாட்சி' அமைப்பதன் மூலமாகவோ ஆளும் நிலை ஏற்படுமாகில், இன்று எப்படி தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியில் கல்வி, வேலை வாய்ப்பு போன்ற சகல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டு, இரண்டாந்தர பிரஜைகளாக கணிக்கப்பட்டு வருகின்றார்களோ, அதைவிட மோசமான நிலைக்கு 'சிறுபான்மைத் தமிழர்' எனப்படுவோர் 'சாதி'யின் பெயரால் ஒதுக்கப்பட்டு கல்வி, வேலை வாய்ப்பு போன்ற சகல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டு நசுக்கப்படுவார்கள் இது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று நான் கூறுகின்றேன். தங்களால் மறுக்கமுடியுமா?

ப: உங்கள் முடிவு முழுக்க முழுக்கத் தவறானது. தீண்டாமையும் சாதியமைப்பும் முற்றாக ஒழிக்கப்படக் கூடிய முறையில் இலங்கையின் புதிய அரசியலமைப்பில் விதி சேர்க்கப்படவேண்டுமென அரசியல் நிர்ணய சபையில் தீர்மானம் கொண்டுவந்தவர்கள் தமிழரசார். இதே போல தமிழர் கூட்டணி இன்று முன்வைத்திருக்கும் ஆறு அம்சக் கோரிக்கையிலும் ஒன்று—அரசியல் அமைப்பில் தீண்டாமை சாதி ஒழிப்புக்கு சட்டம் இருக்க வேண்டும் என்பது. இப்படிக் கோரும் தமிழர் கூட்டணியினர், தமிழர்களுக்கு தனியரசு வந்தால் சிறுபான்மைத் தமிழர்களை ஒதுக்குவார்கள் என்பது ஆதாரமற்ற பீதி. பெரும்பான்மை, சிறுபான்மை என்று எவ்வித சாதி பேதமுமற்ற உண்மையான சமதர்ம தமிழ் சமுதயத்தை உருவாக்குவதே தமிழரசுக் கட்சியின் இலட்சியம்! இதை மறவாதீர்!

ஃ

திருமதி. தவகிருபா,
மல்லாகம்.

கே: 'அன்று நமது நாட்டில் நமக்கென தனி அரசு சமைத்து தனித்துவத்துடன் வாழ்ந்தோம்' என்று கொழும்பு — 13. செல்வி வசந்தா நவரெத்தினம் என்பவருக்கு 21-11-71ம் நாள் இதழில் கூறியுள்ளீர்கள். 'தனி அரசு' சமைத்து வாழ்ந்த இனம் 'இணைப்பரசைத்' தான் எதிர்காலத்தில் அடாப்பிடியாகப் பிரசாரம் செய்வதன் மர்மமென்ன?

ப: மனிதன் மிகப் பழங்காலத்தில் வாழ்வதுபோலவே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. நாகரீகமான வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டுவிட்டான். அதுபோல அரசியலிலும் இனங்களின் சுயாட்சியைப் பேணிப் பாதுகாக்கும் அதே நேரத்தில் நாடு பிளவுபடுவதை தவிர்க்கும் புதிய அரசியல் முறைதான் இணைப்பரசு முறை. அதை சிங்களவர்கள் ஏற்றுக்கொள்ள இணங்காத இன்றைய நிலையில் தனி நாடு பற்றி சிந்திக்கும் நிலைமை தோன்றியுள்ளது. எனவே இதில் மர்மம் என்ன இருக்கிறது?

கே: இந்தியத் தமிழ் மக்களுக்கு 'தமிழ் நாடு' இருந்தும் அரை அடிமைகள் என்கிறீர்கள். ஈழத் தமிழ் நாடு கிடைத்தால் ஈழத் தமிழர்களும் அரை அடிமைகள் தானே!

ப: இல்லை. 'தமிழ் நாடு' ஒரு தனி மாநிலமாக இருந்தாலும் டெல்லியின் பிடிக்குள் தான் இன்னும் இருக்கிறது. அதனால்தான் அங்கு மாநில சுயாட்சிக் கோரிக்கை எழுந்துள்ளது. இங்கு ஈழத் தமிழ் நாடு தோன்றுமானால் அது பூரண உரிமைகள் கொண்ட ஒரு அரசாக இருக்கும்! ஈழத் தமிழர்களுக்கும் பூரண சுதந்திரமும் கிடைக்கும்!

**வெட்டி ஒட்டப்பட வேண்டிய முகவரி**

**திருவாளர் குயுக்தியார்,**
**மே/பா சுதந்திரன்**
**194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,**
**கொழும்பு—12.**

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழிாக்கம் செழிக்கச் செய்வோம்"

இனித் தபாற் பகுதிகளைப் பொறுத்தவரையில் எப்படித் தமிழ், தமிழ் பேசுபவர்களால் புறக்கணிக்கப் படுகிறது என்று பார்ப்போம். வட கீழ் மாகாணங்களில் தமிழர்களால், தமிழர்களுக்கு தமிழிலேயே எழுதப்படும் கடிதங்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே முகவரியிடப்பட்டு அனுப்பப்படுகின்றன. ஏன் இவற்றுக்குத் தமிழில் விலாசம் எழுதி அனுப்பக் கூடாது. மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் போகும் தபால்களுக்கு தமிழில் முகவரி எழுதினுல் போய்க் கிடைக்காதா? வவுனியாவிலிருந்து திருகோணமலைக்கு தமிழில் விலாசம் எழுதினல் போய்ச் சேராதா? எனவே தமிழ்ப் பகுதிகளுக்கிடையே அனுப்பப்படும் கடிதங்களுக்காவது தமிழில் முகவரி எழுத ஒவ்வொரு தமிழ் மகனும் முன்வரவேண்டும். வட கீழ் மாகாணங்களிலே தமிழில் தந்திகளை அனுப்பக் கூடிய வசதிகள் உள்ளன. மணமக்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் தந்திகளைக்கூட தமிழர்கள் ஆங்கிலத்திலேயே அடிக்கிறர்கள். காசுக் கட்டளைக்குரிய விண்ணப்பப்பத்திரம், அஞ்சற் கட்டளை விண்ணப்பப்பத்திரம், வானொலி அனுமதிப் பத்திரம் எடுக்கும் விண்ணப்பப்பத்திரம் முதலியவை எல்லாம் வட கீழ் மாகாணத் தமிழ்பேசும் பெருமக்களால் ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்பப்படுகின்றன. அந்தந்த பத்திரங்களிலேயே தமிழிலும் நிரப்பக் கூடியதாக வழிகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழர்கள் தொடர்ந்து ஆங்கில மொழியில் இவற்றை நிரப்புவதால் காலப்போக்கில் சிங்களம் மட்டும் உள்ள விண்ணப்பப் பத்திரங்களையே வரவழைக்க வழிகோலுகிறுர்கள் என்பதை மறக்கக் கூடாது. தமிழில் நிரப்ப வசதியிருக்கும் போது ஏன் நாம் ஆங்கிலத்தில் நிரப்ப வேண்டும் என ஒவ்வொரு தமிழனும் தன்னைத்தானே கேட்க வேண்டும். இதற்குத் திருப்தியான பதிலை அவனுல் அளிக்க முடியாது.

தமிழில் தந்திகளை அனுப்பினுல் சரியான நேரத்தில் கிடைக்காது என்று சிலர் வாதாடுகிறுர்கள். தமிழில் முகவரி எழுதினுல் தாமதமாகத்தான் போய்ச் சேரும் அல்லது சில சமயம் கிழித்தும் எறிந்து விடுவார்கள் என்று சிலர் வாதாடுகிறுர்கள். ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழில் அனுப்ப வேண்டியது தான், மொழிக்குச் செய்யும் தொண்டு எனக் கருதி எல்லாத் தமிழ் மக்களுமே தமது அலுவல்களைத் தமிழில் செய்தால் காலதாமதமாகுமா? கிழித் தெறியத்தான் முடியுமா? தமிழ் மொழியை, தம் தாய் மொழியை உபயோகிக்கும் போது ஏற்படும் சிறிது கால தாமதத்தைக் கூட பொறுக்க முடியாதவர்கள் தாம் தமிழர் என்றும், தம் மொழி தமிழ் என்றும் கூறுவதுதான் மிக்க வேடிக்கையாக உள்ளது. எமது மொழியை உபயோகிக்கும் பொழுது ஏற்படும் சிறிது நேர தாமதத்துக்காக, மொழியையே கைவிட்டு, வேற்று மொழியில் அலுவல் செய்யும் நாம் தமிழ் மொழிக்காக போராடுகிறேம் என்று கூறுவது சுத்தப் பைத்தியக்காரத்தனமல்லாமல் வேறெ...

## உணர்ச்சிக் கவிஞரின் நூல்கள்!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் ''தமிழா உன்னைத்தான்!'', ''உயிர் தமிழுக்கு...'' என்ற இரு நூல்களை 'படைஞர் பாசறை'யினர் வெளியிட்டுள்ளனர்.

இந்நூல்களிரண்டையும் பெற விரும்புவோர் ரூபா 1/25க்கு அஞ்சற் கட்டளையும் ஏதாவது ஒரு நூலைப் பெற விரும்புவோர் -/75 சதத்திற்கு அஞ்சற் கட்டளை அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: [illegible] திரன், 6/3 [illegible] வீதி, கொழும்பு-6.

## கனுக் கண்டேன் தோழி

நானோர் கனுக் கண்டேன் தோழி—இந்த
தானிலம் போற்றிடும் நம்தமிழ் மக்கள்
வானவர் புகழ்ந்திடும் வண்ணம்—தங்கள்
வன்மை மிகு தோள்கள் தட்டித் திரண்டார்.

திரண்டனர் பல்கோடி மக்கள்—அவர்
சிந்தை கவர்ந்தவள் நம்தமிழ் அன்னை
பெருகினர் இக்காட்சி கண்டோர்—எங்கும்
வெற்றிச் சங்கம் பல முழங்கின தோழி.

போர்ப் பறை கொட்டினர் நம்மோர்—அங்கு
போலி வேடக்காரர் புறமுது கிட்டார்
கார்முகில் போலத் திரண்ட—அந்தக்
கவின் பெறு காட்சிக்கு ஈடுண்டோ தோழி.

வெட்ட வெளி இட மொன்றில்—பெரும்
வெஞ்சினப் போ ரொன்று மூண்டது தோழி
சட்டச் சடசட வென்றே—அங்கு
சரம்புரி வீரர்கள் வீழ்ந்தனர் தோழி.

தமிழுக்கு இன்னல்கள் வந்தால்—அங்கு
தன்மானப் போ ரொன்று உருவாகிடாதோ
அமிழ் தினை ஒத்த தமிழை—யாரும்
அழிக்க முயன்றுல் அழிவார்கள் தோழி.

—செந்தமிழ்ச் செல்வி—

## தமிழ்க் கொடி வாழ்க!

மரக்கிளை கழிநுனி சிறுகுடில் தொட்டு
பெருமனை நல்மாடம் நெடுமதில் மேலும்
ஆழ்கடல் விளைநிலம் மலையுச்சி யெங்கும்
நீழ்புரம் கடைத்தெரு தமிழீழ மெங்கும்
எம்மின மக்களின் கைகளில் இலங்கும்
எம்கொடி எழிற்கொடி தமிழ்க்கொடி வாழ்க!

செந்நிறம் பொன்னிறம் எழுமெல் பூட்டி
நம்குல விளைஞர்க்கு வீரத்தை யூட்டி
சமத்துவ ஈழததை தனித்தமிழ் நாட்டை
அமைத்திட வந்திங்கு பிறந்திட்ட மணியே
வாழ்கவே எங்கள் தாய்த்திருக் கொடியே
நீழ்கநின் பெருமை இவ்வாழிரு ழுலகில்!

"தமிழ் வேந்தன்"
முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மேடை

# "இனியும் பொறுப்பதில்லை தம்பி...."

அன்பு நண்பா,

போர்முரசு கேட்டுப் புலிபோலக் கிளர்ந்தெழுந்து, கார்குழலாள் கன்னத்தில் கனிவோடு 'இச்' தந்து, வேல் விழியாளிடம் விருப்போடு விடைபெற்று—மார் தட்டிக் களம் புகுந்து மாற்றான் உடல் கிழித்து வீரம் விளைத்திட்டனர் நம் முன்னோர் என்பதற்கு ஆதாரம் பலவுண்டு தமிழர் வரலாற்றேட்டில்! புறநானூற்றைப் புரட்டிடின், புதிய முறுக்கேறும்; புதுத்தெம்பு பிறந்திடும்; பொடிப் பொடியாக்கிட வேண்டும் பூந்தமிழின் எதிரிகளை எனும் எண்ணம் நம் உள்ளத்தில் விரவும்!

இன்றும் போர்முரசு கேட்கிறது! இது மறப்போர் முரசு அல்ல! அறப்போர் முரசு!! அன்னைத் தமிழின் அழுகையைத் துடைத்திட தங்கத் தமிழ் ஈழத்தில் தமிழாட்சி நிறுவிட—தமிழ்க்காளையரே! கன்னியரே வாரீர்! வாரீர்! என்று எழுச்சிக்குரல் கேட்கிறது! விடுதலைப் பண் எழுகிறது!

கத்தியும் வேண்டாம்: இரத்தமும் வேண்டாம்; சத்தியமும், அறமும் ஏந்தி சமர்புரிவோம்: நீதியும் நியாயமும் எங்கள் பக்கம்; எங்களை நாங்களே தியாகத்தீயில் பலி கொடுத்திடுவோம்; எங்களை நாங்களே வருத்துவதன் மூலம் எம்மை ஆதிக்கம் செலுத்திட நினைப்போரின் மனச்சாட்சியை உறுத்திடச் செய்வோம்—அறவழியில் போராடி அடிமைத் தளையை அறுத்தெறிவோம் என்கின்ற எழுச்சி நாதம் ஈழத் தமிழகம் எங்கும் இன்று எதிரொலிக்கிறது!

அறவழிப் போராட்டத்தில் நம்பிக்கையில்லாதோரும் கூட, எப்படியும் போராடியே தீரவேண்டும்—அடங்கியொடுங்கி ஆமைகளாகி, ஊமைகளாகி, அடிமைகளாகி, நாய் வாழ்வு வாழ்வதிலும் நம்மினத்தின் மீட்சிக்குப் போராடி விடுதலைப்போரில் அழிந்தொழிந்து போவதே மேல் என்கின்ற முடிவுக்கு இன்று வந்துவிட்டார்கள்!

ஆம் நண்பா, ஈழத் தமிழனின் உள்ளத்தில் விடுதலைத் தீ அணைக்க முடியாத அளவுக்கு மீண்டும் மூண்டெழுந்துவிட்டது! தமிழ்க் காளையர் உள்ளமெல்லாம் மீண்டும் இன்று உலைக்கூடமாக மாறிவிட்டது! ஆட்சியாளருக்குத் தமிழர் கூட்டணி விடுத்த ஆறு அம்சக் கோரிக்கை மீது, அவர்கள் காட்டிய அலட்சியம்—தமிழ் தேசிய இனத்துக்கு மேலும் ஆத்திரத்தையும் ஆவேசத்தையுமே கிளறிவிட்டிருக்கிறது! 'இனியும் பொறுப்பதில்லைத் தம்பி—எரிதழல் கொண்டுவா' என்று கொதித்து எழுகிறது இளைஞர் கூட்டம்!!

ஐயிரண்டு திசை முகத்தும் தன்புகழை வைத்தாண்ட பைந்தமிழர் தலை மகனும் பார் போற்றும் மாமன்னன்—இராவணன் காலமுதல் ஈழத்து மண் எமது ஏகபோகச் சொத்து: இங்கு தமிழர் நாம் தனியாட்சி கண்டிருந்தோம் — அந்நியன் ஆட்சிதனையடியோடு அகற்றிடும் பொதுவான போராட்டத்தில் அயலார் என்ற முறையில் சிங்கள இனத்தாருக்குக் கை கொடுத்துதவினோம்!—அந்நியர் அகன்றதும் எம் உரிமை எமக்குக் கிடைத்திடும் எனும் நம்பிக்கையில்!

ஆனாலும் கிடைத்ததோ பெரும் ஏமாற்றம்! வெள்ளையர் அகன்றும் அவர்களது காலணிக்குள் நுழைந்துவிட்ட புதிய கொள்ளையர்கள், தமிழர் உரிமைகளை கொள்ளையடித்திடத்தொடங்கினர்; தமிழர் உரிமைகளை கொள்ளையடித்திடும் திட்டம் பூரணப்படுத்தப்பட்ட சாசனம்தான் சென்ற மே திங்கள் 22ம் நாள் சிங்கள ஏகாதிபத்தியத்தினால் நிறைவேற்றப்பட்ட புதிய அரசியல் சட்டம்!

தமிழினத்தை இந்நாட்டின் முழு அடிமைகளாக்கி அழித்தொழித்திடும் அடிமை முத்திரை—மரண சாசனம் தான் புதிய அரசியல் சட்டம்! இந்தச் சட்டத்தினை ஈழத் தமிழ்த் தேசிய இனம் கிஞ்சிற்றும் ஒப்புக்கொள்ளாது—அடிபணியாது என்பதை எடுத்துக்காட்டு முகமாகத்தான் மே 22, 23, 24, ஆகிய மூன்று நாட்களிலும் பிரமிக்கத்தக்கவகையில் தமிழர்கள் ஹர்த்தால், நடத்தி, துக்கதினம் அனுட்டித்து தங்கள் வலுவான எதிர்ப்பை நடைமுறையில் காட்டினார்கள் — சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு! தமிழ் இளைஞர்கள், ஹர்த்தால் போராட்டத்தின்போது காட்டிய தீரமும் எழுச்சியும் உணர்ச்சியும் தமிழினம் வீறுகொண்டெழுந்துவிட்டது என்பதை அகில உலகுக்கும் பறைசாற்றிற்று!

நண்பா, புதிய அரசியல் சட்டத்துக்கு நாம் கட்டுப்படமாட்டோம் என்பதனைப் பாரறிய அறிவித்துவிட்ட ஈழத்தமிழர்கள்—தமிழ் ஈழத்தைத் தனிச் சுதந்திர நாடாக்கும் போராட்டத்தில் உடனடியாக இறங்கிவிடவுமில்லை என்பதை நீ அறிவாய்!

இந்நாடு பிளவுபடாமல் ஒரே நாடாக இருந்திட வேண்டுமென்ற உண்மையான ஆசையினால் — தமிழர் கூட்டணி மூலம் தமிழ் மக்கள் ஆட்சியாளருக்கு ஆறு அம்சக் கோரிக்கையொன்றை முன்வைத்தார்கள்! இந்த ஆறு அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் புதிய அரசியல் சட்டம் செப்டம்பர் 30ம் திகதிக்குள் திருத்தப்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள்!

25.6.72ல் கோப்பாயில் நிறைவேற்றப்பட்ட அத்தீர்மானத்தினை இந்நேரத்தில் உனக்குச் சுட்டிக்காட்டுவது அவசியமெனக் கருதுகிறேன். அத்தீர்மானம் இதுதான்:-

"தமிழ் மக்களுடைய கீழ்க்காணும் கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் அரசியல் அமைப்பு திருத்தப்பட வேண்டுமென்று தமிழர் கூட்டணி கோருகிறது.

(அ) அரசியல் அமைப்பில் சிங்களத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே இடம் தமிழுக்கும் அளிக்கப்படவேண்டும்.

(ஆ) இந்நாட்டைத் தமது தாயகமாகக் கொண்ட தமிழ் பேசும் மக்களுக்கு பூரண குடியுரிமைக்கு அரசியல் அமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும். பிரஜைகளில் பிரிவுகளோ அவற்றின் அடிப்படையில் பாரபட்சம் பாராட்டுதலோ இருத்தலாகாது. எவருடைய குடியுரிமையையும் பறிக்கும் அதிகாரம் அரசுக்கு இருத்தல் ஆகாது.

(இ) அரசு மதச்சார்பற்றதாக இருக்கும் அதே நேரத்தில் எல்லா மதங்களுக்கும் சமபாதுகாப்பு அளித்தல் வேண்டும்.

(ஈ) தனி மனிதருக்கிடையிலும் இன கலாசாரக்குழுக்களுக்கிடையிலும்சமத்துவத்திற்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய நீதிமன்றம் மூலம் நிலைநாட்டப்படக் கூடிய அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்பில் இடம்பெற வேண்டும்.

(உ) சாதியையும் தீண்டாமையையும் ஒழிக்க வேண்டுமென்பது அரசியலமைப்பில் இடம் பெறவேண்டும்.

(ஊ) அதிகாரம். அரசின் உடமையாக இல்லாது மக்கள் உடமையாக இருக்கக் கூடியதாக மக்கள் பங்குகொள்ளும் சனநாயக ஆட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட ஓர் அமைப்பாலேயே சனநாயக சமதர்ம சமுதாயம் சாத்தியமாகும் என்ற கொள்கை அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

1972ம் ஆண்டு செப்டம்பர் 30ம் திகதியுடன் பூர்த்தியாகும் மூன்று மாத காலத்திற்குள் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை உள்ளடக்கக் கூடிய வகையில் அரசியலமைப்பைத்திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத்தவறுமானால் தமிழினத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழினத்தின் அரசியல் பொருளாதார, கலாசார வாழ்வை அமைத்துக்கொள்வதற்கும் சாத்வீகப் போராட்டத்தில் இறங்குவதென்று தமிழர் கூட்டணி தீர்மானிக்கிறது.

நண்பா, ஈழத்தமிழ்த் தேசிய இனம், கட்சி வேறுபாடுகளைக் கடந்து, ஒன்றுபட்டு விடுத்த மேற்கண்ட ஆறு அம்சக் கோரிக்கை அப்படியே சிங்கள அரசினால் அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டது; தூக்கியெறியப்பட்டுவிட்டது; தமிழினம் அவமானப்படுத்தப்பட்டுவிட்டது! ஆம், இது ஈழத்தில் வாழும் மானமுள்ள ஒவ்வொரு தமிழனுக்கும், தமிழச்சிக்கும் அவமதிப்புத்தான் என்பதில் தடையில்லை!

தமிழ் தேசிய இனம் விடுத்த ஆறு அம்சக் கோரிக்கைகளை ஏறெடுத்தும் பார்த்திட அரசு பிடிவாதமாக மறுத்துள்ளதன் மூலம் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு ஆட்சியாளர்களே வெடிவைத்திருக்கிறார்கள்! பிரிவினைக்கு வித்திட்டிருக்கிறார்கள்! இதை வருங்காலம் நிச்சயம் உணர்த்தத்தான் போகிறது!

இந்த நிலையில் தமிழ் தேசிய இனத்துக்கு உரிமைப் போராட்டத்திலிறங்குவதைத் தவிர வேறு என்ன வழிதான் இருக்கிறது? போராட்டம் ஒன்றில் குதிப்பதொன்றின்மூலம்தான் ஈழத்தில் தமிழினம் தனது சுதந்திரத்தை நிலைநாட்டிட முடியும்! இந்நாட்டில் சுயமரியாதையுள்ள மக்களாக வாழ்ந்திட முடியும்!

ஈழத் தமிழினம் தன்னைத்தானே ஆளும் சுயநிர்ணய உரிமையை பெறுவதொன்றின் மூலமே ஈழத்தில் அடிமை நிலையகற்றி தலை நிமிர்ந்து வாழ முடியும்! எனவே தமிழினம் நடத்தவிருக்கும் விடுதலைப் போராட்டத்தின் முற்று முடிவான—இறுதியான ஒரே நோக்கம், ஈழத் தமிழ் நாட்டில், தமிழினம் தன்னைத்தானே ஆளுகின்ற உரிமையைப் பெறுவதொன்றாக இருக்கவேண்டுமே தவிர சில அற்ப சலுகைகளைப் பெறுவதுடன் திருப்தியடைவதாக இருந்திடக்கூடாது!

எனவேதான் நண்பா, அண்ணல் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2ம் நாள் ஈழத் தமிழ் நாடெங்கும் ஹர்த்தால் நடத்தி, ஒத்துழையாமை இயக்கத்துடன் ஆரம்பமாகவிருக்கும் ஈழத் தமிழர் விடுதலைப் போர்—இறுதி வெற்றி அதாவது தமிழ் ஈழத்துக்கு தன்னாட்சி பெறுகின்றவரை தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்பதே தமிழ் இளைஞர்களின் ஒரே ஆவலாகும்!

மக்கள் போதிய அளவு எழுச்சியும், உணர்ச்சியும் பெற்றுவிட்டால்—தலைவர்கள்தான் ஒரு கட்டத்தில் உளம் சோர்ந்து பின்வாங்க முயன்றாலும்—அப்படி பின் வாங்கும் தலைவர்களைத் தூக்கியெறிந்து விட்டு மக்கள் விடுதலைப் பாதையில் முன்னேறிச் செல்ல முடியும்! இன்று தமிழ் மக்களை வழி நடத்துவோர் எப்போதாவது ஒரு கட்டத்தில் களைப்படைவார்களானால், இளைஞர்கள் போராட்டத்துக்கு தலைமையேற்றிடவும் தயாராக இருந்திட வேண்டும்!

இன்னொன்றும் நான் கவனித்தேன் நண்பா—தமிழர் கூட்டணி உடனடியாகத் தந்திருக்கின்ற போராட்டத் திட்டங்கள் தீவிரமானதாக இல்லை என்கின்ற ஓர் குறை இளைஞர்களிடம் இருக்கத்தான் செய்கிறது. அதை மறைத்திட நான் தயாராக இல்லை. ஆனாலும் அதைக் கேட்கும்போது உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. ஏன் தெரியுமா?

தீவிரமாக போராடிடவேண்டும்என்கின்ற எண்ணமும் — அப்படிப் போராடுவதற்கு வேண்டிய இளைஞர்களும் நமது விடுதலை இயக்கத்தில்போதியளவு இல்லையென்றால், அதுதான் நமக்கு வெட்கமே தவிர, களம் செல்லத் துடிக்கின்ற காளையர் பலருண்டு—ஆனாலும் தலைவர்கள்தான் இன்னும் அனுமதிக்கின்றார் இல்லை—என்பது மகிழ்ச்சிக்குரியதேதவிர—வருத்தத்துக்குரியதல்ல.

துடிப்பும், தீவிரமும்கொண்ட இளைஞர்களுக்கு ஒன்றைமட்டும் கூறுவேன்—நமது விடுதலைப் போராட்.

(8-ம் பக்கம் பார்க்க)

## அடிமை வாழ்வைவிட சாவு உயர்ந்தது!

என் தாய் நாட்டின் பூரண விடுதலைக்கு, என் கடைசி மூச்சுவரை உழைப்பதுவே என் குறிக்கோள். வெஞ்சிறையில் தள்ளினாலும் கவலை கொள்ளேன். நான் பேசி மக்களிடம் கிளர்ச்சி செய்வது வேறு ஒருவரின் தூண்டுதலின் பேரில் என்பது பொய். சுத்த இரத்தம் ஓடும் எவனும் சுதந்திர நாதத்தை எழுப்பாமல் இரான்.

என் பேச்சு நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது என்கிறார்கள். நோய்வாய்ப்பட்டவன் படும் துன்பங்கள் அவனுக்குப் பிறர் சொல்லியா தெரிய வேண்டும்? அதிகார வர்க்கத்தின் ஆணவமும் அடிமையின் வெறுப்பும்தான் இத்தகைய குழப்பங்களுக் கெல்லாம் காரணம். இரகசியங்கள் அறியும் நிபுணர் கூட்டம் இந்த சாதாரண உண்மையைக்கூட ஆச்சரியம்; அறியாதது அவமானமும்கூட!

என்னைப் போன்றவர்களை சிறைக்குள் தள்ளிவிட்டால் சுதந்திரக்கனல் அணைந்துவிடுமென்று ஆட்சியாளர்கள் தப்புக் கணக்கு போடுகின்றனர். என்னைத் தண்டித்தால் மட்டும் இந்தச் சுதந்திரக் கிளர்ச்சி அடங்கிவிடாது.

சாவுக்கு நாம் ஏன் அஞ்ச வேண்டும்? அடிமை வாழ்வைவிடப் பயங்கரமானதா சாவு! நம் இலட்சியத்துக்காக எல்லாவித இன்னல்களையும் ஏற்போம்! சுதந்திரம் நம் குறிக்கோள்; எப்பாடு பட்டாவது நாம் அடைந்தே தீருவோம்.

—பொன். சிவகுமாரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# அக்டோபர்—2

**அ**க்டோபர் 2–

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்ற பாரதமக்களை கைதூக்கி விட வந்த கர்ம வீரர்—கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று நடத்திக் காட்டிய மகாத்மா —அடக்கப் படுகிறவர்களினதும் ஒடுக்கப்படுகிறவர்களினதும் உண்மையான நண்பர்—அஹிம்சை என்ற ஆயுதத்தை அரசியலில் உபயோகித்து வெற்றி கண்ட மகான்—அண்ணல் காந்தியடிகள் அவதரித்த திருநாள்;

ஆதிக்கவெறி, அடக்குமுறை, ஆயுதப்படைகளின் ஆர்ப்பாட்டம் — எதற்கும் அஞ்சாது அமைதி வழியில் அன்புமார்க்கத்தில் சத்திய யுத்தம் ஒன்றை நடத்தி விடுதலையை வென்றெடுத்தவர் அண்ணல் காந்தியடிகள்!

அஞ்சியும் கெஞ்சியும் அடிமை வாழ்வில் மூழ்கி நின்ற பாரத மக்களுக்கு அச்சமகற்றி விடுதலை உணர்வேற்றி வெற்றி தேடிக்கொடுத்தவர் மகாத்மா!

அண்ணல் காந்தி— அடிமைத்தனத்தை எதிர்த்துப் போராடுகின்ற மக்களுக்கெல்லாம் ஓர் நம்பிக்கை நட்சத்திரம். விடுதலைக்குப் போராடும் மக்களுக்கு—அதுவும் எண்ணிக்கை பலமோ படைபலமோ அற்ற பலவீனர்களுக்கு மகாத்மா காந்தியடிகள் ஓர் ஆதர்ஸ தெய்வமாகத் திகழுகிறார்!

அத்தகைய சாந்த சொரூபி— அஹிம்சையின் காவலர் அண்ணல் பிறந்த அக்டோபர் 2ம் நாளில் ஈழம் வாழ் தமிழ் தேசிய இனம் மீண்டும் சாத்விகப் போராட்டத்தில் காலடி எடுத்து வைக்கிறது!

அடிமைத்தனத்தை எதிர்த்து — வாழு, வாழவிடு என்ற கொள்கையின் அடிப்படையில் அண்ணல் காட்டிய அஹிம்சை வழியில் ஈழத்தமிழினம் போராட்டத்தில் இறங்குகிறது.

என்ன நேரினும் அநீதியான சட்டங்களுக்கு அடிபணியக் கூடாது என்பதுதான் காந்தியடிகளின் கட்டளையாகும். அதைத்தான் ஈழத்தமிழினம் அக்டோபர் 2ம் நாளில் பின்பற்ற உறுதி பூணுகிறது!

புதிய அரசியல் சட்டம் அநீதியான பிற்போக்குச் சட்டம்; தமிழ் மக்களை மீளா அடிமைகளாக்கி அழித்தொழிக்கும் சட்டம்; இந்த அரசியல் சட்டத்துக்கு அடிபணிய மாட்டேன்; இதை எதிர்த்து தர்மத்தின் வழிநின்று இறுதிவரை போர் புரிவேன் என்று ஈழத் தமிழன் ஒவ்வொருவனும் அக்டோபர் 2ல் உறுதியெடுத்துக் கொள்ளவேண்டும்.

ஈழத்தமிழினம் அண்ணல் காந்தி காட்டிய அஹிம்சை நெறியை அணுவளவும் பிசகாது பின்பற்றிவந்திருக்கிறது. 1956ம் ஆண்டிலும் 1961ம் ஆண்டிலும் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டங்களை காந்தியடிகள் கண்டிருந்தால் நிச்சயம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஈழத்தமிழ் மக்களைப் பாராட்டியிருப்பாரென்பதில் ஐயமில்லை.

இப்போதுகூட காந்தியடிகள் காட்டிய போராட்ட நெறி முறையிருந்து ஈழத்தமிழினம் சிறிதும் பிறழவில்லை கோரிக்கைகளை சமர்ப்பித்து, காலக்கெடு கொடுத்து அந்தக் காலக்கெடுவுக்குள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆணவம்பிடித்த ஆட்சி பீடம் நடவடிக்கை ஏதும் எடுக்காததால் — வேறுவழியில்லையென்ற நிலையில் தமிழினம் போராட்டத்தில் குதிக்கிறதே தவிர வீம்பு கொண்டு போராடவில்லை!

சுயமரியாதையையும், சுதந்திரத்தையும் எந்த ஒரு தனிமனிதனும் சரி, எந்த ஒரு நாடும் சரி எந்த ஒரு இனமும்சரி கிஞ்சிற்றும் விட்டுக்கொடுத்திட முடியாது!

இது ஈழததமிழ்த்தேசிய இனத்தின் மானப் பிரச்சினை — வாழ்வுப் பிரச்சினை! புதிய அரசியல் திட்டம் தருகின்ற அடிமைத்தனத்தை ஏற்று அழிந்தொழிந்து போவதா அல்லது சுதந்திரத்துக்கு போராடி தனித்துவத்தைப் பேணி தன்மானமுள்ள ஒரு இனமாக இந்த நாட்டில் வாழ்வதா என்பதே தமிழினத்தின் முன் இன்றுள்ள ஒரேபிரச்சினையாகும்!

என்ன நேரினும்—எவ்வளவு துன்பம் வரினும் உரிமைகளுக்குப்போராடி இந்நாட்டில சுதந்திரத்தை நிலைநாட்டியே தீருவோம் என்று உறுதிபூண்டு விட்டனர் ஈழத் தமிழ் நாட்டினர். இந்த உறுதியுடன் காந்தியடிகள் காட்டிச் சென்ற ஒத்துழையாமை, சட்ட மறுப்பு ஆகிய அஹிம்சா ஆயுதங்களை கையில் ஏந்தியபடி அவர் பிறந்த நாளில் சாத்விகப் போராட்டத்தில் குதிக்கிறது ஈழத தமிழினம்!

தமிழினம் சுதந்திரம் என்ற இனியஇலட்சியத்தையடைவதற்கு ஆண்டுகள் பலவாகலாம்; எத்தனை காலம் சென்றாலும், குன்றாத உறுதியுடனும் குலையாத நெஞ்சுடனும் திடசித்தத்துடனும் அஹிம்சை நெறியிலிருந்து வழுவாது தியாகப் பாதையில் முன்னேறுவோமேயானால் 'வெற்றி நமதே' என்பதை ஈழத் தமிழினம் நெஞ்சில் இருத்துக் கொள்ளுமாக!

தர்மம் ஒருபோதும் தோற்றதில்லை—அநீதி ஒருபோதும் வென்றதுமில்லை. தமிழினம் நடத்த விருக்கும் யுத்தம் தர்மயுத்தம்—அநீதியை எதிர்க்கின்ற யுத்தம்!

இந்த யுத்தத்தில் நிச்சயம் வெற்றிகொள்ளுவோம் என்ற உறுதி நெஞ்சுடன் அண்ணல் காந்தியடிகளின் போதனைகளைப் பின் பற்றி தலைவர்கள் அப்போதைக்கப்போது காட்டும் சாத்விக வழியில்—கட்டுப்பாட்டுடன் நடந்து தமிழினம் வெற்றிப்பாதையில் முன்னேறட்டும்!

'சுதந்திரம் நமது குறிக்கோள் — அதை எப்படியும் அடைந்தே தீருவோம்' என்பதே ஈழத்தமிழனின் இலட்சிய முழக்கமாகி, அக்டோபர் 2 முதல் செயலாகட்டும்!

# அறப்போரில் குதிப்போம்!

## தந்தையின் ஆணை கிடைக்கட்டும்!!
## தனயர்கள் தானை திரளட்டும்!!!

**வேளை** வந்துவிட்டது! வீரர்களேவிழித்தெழுங்கள்! தலைவர்களின் 'தலையசைவில் தண்டமிழைக் காத்திடுவோம்! மாந்தமிழ் மாருதத்தினோடு சேர்ந்து மணம் வீசிய ஈழமண்ணில், இன்று மானமிழந்து மாண்புகுலைந்து ஈனமுற்று ஏங்கி நிற்கும் எம் தமிழ் இனத்தினைப் பார்த்து இரத்தக் கண்ணீர் வடித்து நிற்கும் இளந்தமிழர்கூட்டமே! உன்னைத்தான் அழைக்கிறேன் — அன்னைத் தமிழாளின் அடிமை விலங்கொடிக்கும் அறப்போரணியில் சேர ஆர்ப்பரித்து எழுந்துவா! ''ஓடையிலே எம் சாம்பர் கரையும் போதும் ஒண்டமிழே கலகலத்து-ஓட வேண்டும்'' என்ற கவிஞனின் அருங்கனவை அகத்தே கொண்டு வாழும் வீர இளைஞர் கூட்டமே! விரைந்தோடிவா!

மலைநாட்டு தமிழர் வாயில் மண்ணைச்சொரிந்தார்கள்—பொறுத்திருந்தோம்.

சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொணர்ந்து செந்தமிழைச் சிரழித்தார்கள் —பொறுத்திருந்தோம்.

அமைதிவழிப் போராட்ட வீரர்களை அடித்துநொறுக்கி மிருகப் பசிக்குத் தீனி தேடினார்கள்—அதையும் பொறுத்திருந்தோம்.

கல்வியிலே, கலாச்சாரத்திலே வாழ்க்கையிலே, வசதியிலே, சிங்களத்தைத் திணித்தார்கள் - சிந்தை துடித்தோம். விழுங்க மறுத்தோம்.

அப்போதும் பொறுத்திருந்தோம்; நாட்டின் வாட்டத்தைப் போக்கத் திட்டுகின்றோம் திட்டமென்று ''அரசியல் நிர்ணய சபையைச் சமைத்தார்கள் —அதிலாவது தமிழர்களைக் 'கணி'ப்பார்களா வென்று காத்திருந்தோம். அரசியல் நிர்ணய சபையிலும் அநியாயம் இழைக்கப்பட்டது!

இதையும் பொறுப்பதா? இதயம் பொறுக்குமா? பௌத்த சிங்களக் குடியரசு பலத்தோடு உருவாகிவிட்டது. எமது பொறுமையைத் தவறாகப் புரிந்துகொண்டனர் ஆட்சியாளர்!

'குடியரசு தினத்திரவு முழுதும் பிரித்(து) ஓதிய பொழுது தாம் தமிழனையும் சிங்களவனையும் பிரித்து ஓதுகிறோம் என்பதை அகிலத்துக்குக் காட்டிவிட்டார்கள். கோணேசர் ஆலயத்தை கோட்டையாக்க முனைந்தார்கள் இன்று கொலுவிருந்த தமிழ்மொழியைக் கூறுக்க முயல்கின்றனர்!

புத்தனை நாம் வணங்கத் தயார் ஏன்?

அவன் காட்டிய அன்பு நெறிக்காக, அகிம்சாதர்மத்துக்காக! வாழ்க்கைத் தூய்மைக்காக,—வாக்கின் நேர்மைக்காக!

தகுதியை மதிக்கும் பண்பாட்டைத் தவறாகப் புரிந்தது ஆள்வோரின் தவறு!

புத்தனை மதிக்கிறோம்— அதற்காக அன்னைத் தமிழை மறக்கவேண்டுமா?

புத்தனை நேசிக்கிறோம்— அதற்காக சிறிவரும் சிங்களத்தை இரக்கவேண்டுமா?

நாம் மதிப்பது ஏற்பது புத்தனின் கொள்கையே தவிர சிங்களத் திணிப்பையோ அல்லது செந்தமிழின் அழிவையோ அல்ல.

நாம் தமிழர்கள்—தமிழ்த் தாயின் உதிரத்திலே வளர்ந்து தமிழ்தாயின் பெயராலே வாழுகிறோம்! ஆகவே தமிழை விற்க தயாராக நாமில்லை: அன்னையையே விலைகூறும் அறிவிலிகள் அல்லர் நாம்! இதை ஆளுவோர் அகத்திற் கொள்ளவில்லை! அந்தோ பரிதாபம்! தமிழ் இனம் என்றால் கும்பலிலே கோவிந்தா போடும் சோம்பேறிக் கூட்டமல்ல அப்படி யாராவது ஒரு தமிழன் செய்தால் அவன் தவறிப் பிறந்தவனே!

தாழ்ந்து வரும் தமிழினமே! உண்மையை உணர்ந்து கொள்!

ஒரு இனத்தை இல்லாதொழிக்க இன்னுயிராய் அவர் போற்றும் செம்மொழியைக் கைப்பற்று'' என்பது ஒரு அரசியல் வேதம்.

இதைத்தான் ஈழத்தின் அதிகாரக் கும்பல் அனுசரித்து வருகிறது.

தொகையிற் குறைவெனினும் திறமையிற் செழித்திருக்கும் செந்தமிழனத்தைச் சீரழிக்கச் சிங்களத்தைத் திணித்தனர்.

எங்கெல்லாம் தமிழுக்கு அழிவு தேடமுடியுமோ அங்கெல்லாம் அந்தப் பணியை அருமையாக நிறைவேற்றினர். ஆனால் தமிழை தகர்க்க முடியவில்லை. காலனை வென்றவன் களம் பல கண்டவன் கன்னித்தமிழன் என்பதை வரலாறு படிக்காத வஞ்சகர்கள் எப்படி அறிய முடியும்? வெட்ட வெட்ட தழைக்கும் வளர் தமிழைக் கண்டு வாடினர் வழிதேடினர்.

இன்று புதிதாக வரையப்பட்ட அரசியல் சாசனத்தின் மூலம் அருந் தமிழை அறவே அழிக்க அடிகோலி விட்டனர். இனியும் பொறுப்பதா? உயிரை வெறுப்பதா?

பொறுத்தால் பட்டுவிடும் தமிழன் வாழ்வு! கோவை அண்ணு செப்பியது போல் தமிழன் வாழ்ந்த கதை வரலாறுகிவிடும். இதையும் பார்த்துக்கொண்டு இரும்பாயிருப்பதா?

தமிழினமே! தரணி புகழ் நாகரீகத்தை ஆறுயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே நிலைநாட்டிய தமிழினமே! பொறுத்தது போதும் பொங்கி எழு!

அவகாசம் கொடுத்தோம் ஆட்சியினருக்கு — அதையும் அலட்சியம் செய்துவிட்டார்கள்! ஒன்றுபட்ட தமிழினத்தின் குறைந்த பட்சமான ஆறம்சக் கோரிக்கைகளையும் அதிகாரத் திமிரோடு வெறுத்து ஒதுக்கிய பின்னரும் பொறுத்திருப்பதா?

தரணி போற்ற பேரணியமைந்து வாழ்ந்த தமிழினமே! தீர்க்கமாய்ச் சிந்தி

(7-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழருக்கு ஆதரவாக தமிழகமெங்கும் சுவரொட்டிகள்!

அக்டோபர் 2ல் ஆரம்பமாகும் இலங்கைத் தமிழர் விடுதலைப் போருக்கு ஆதரவாக தமிழகமெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. குடி பெயர்ந்த தமிழர் பேரவையினுல் வெளியிடப்பட்ட இச் சுவரொட்டி தமிழர் கூட்டணியின் உதய சூரியன் கொடியின் பின்னணியில் அமைந்துள்ளது. தந்தை செல்வாவின் பென்னம் பெரிய உருவப்படத்தைக் கொண்டுள்ள இச் சுவரொட்டியில் பின்வரும் வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

**'கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது? கடல் கடந்த தமிழர் கொடுமை தாளாது வடித்த கண்ணீரே காரணம். — பேரறிஞர் அண்ணு. அக்டோபர் 2 ல் இலங்கைத் தமிழர் உரிமைப் போர்! தமிழ் இளைஞர் பலர் சிறையில்—தாய்த் தமிழகம் தரும்பதில் என்ன?'**

## வெட்கக்கேடு!

● அண்மையில் கொழும்பு மாநகரசபையில் தமிழுக்கும் உரிமை தரப்படவேண்டும் என்று கொட்டாஞ்சேனை மேற்கு உறுப்பினர் திரு. ஹரிஸ் விக்கிரமதுங்கா ஒரு பிரேரனை கொண்டுவந்திருந்தாரல்லவா? சிங்களவராக இருந்தும், இந்த உறுப்பினர் கொண்டுவந்த மேற்படி பிரேரணைக்கு எதிராக வாக்களித்தவர்களில் தமிழ் பேசும் உறுப்பினர்கள் நால்வர்—அதாவது தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இஸ்லாமியர்கள்!

● ஜனுப் எம். எஸ். எம். சாறூக் என்ற ஒரே ஒரு இஸ்லாமியரே பிரேரணையை அனுவதித்ததுடன் ஆதரித்தும் வாக்களித்தார். தமிழிலே மாநகரசபைக் கூட்டத்திலும் பேசினுர். அவரது தாய்மொழிப் பற்று வாழ்க!

● தமிழுக்கு உரிமை கோரிய மேற்கண்ட பிரேரணை விவாதிக்கப்பட்ட நாளில் தமிழ் எம். எம். சி.க்கள் மாநகரசபைக் கூட்டத்துக்கு போகாது 'டிமிக்கி' கொடுத்துவிட்டார்களாம். இருந்த ஒரேயொரு பெண் உறுப்பினரும் வாக்களிப்பு நேரம் பார்த்து நைஸாக அந்த இடத்தை விட்டு நழுவிவிட்டாராம்!

● கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் வாழுவோரில் தமிழ் பேசுவோரே அதிகமானேராக இருந்தும் ஒருவர் கூட தமிழில் மாநகரசபை நிர்வாகத்துக்கு எழுதுவதில்லையாம். தமிழர்களே இப்படித் தமிழில் எழுத முன்வராதபோது தமிழுரிமையை எப்படி நிலைநாட்டுவது என்று சிங்கள உறுப்பினர் ஒருவரே சொல்லி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செய் அல்லது செத்துமடி'

## அண்ணல் காந்தியடிகளின் இக்கட்டளையை நினைவு கூருவோம்!

### அஹிம்சை வழியில் அறப்போரில் குதித்து தமிழினத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டுவோம்!

### கலங்கி நிற்கும் ஈழத் தமிழருக்கு கலங்கரை விளக்கம் செல்வா!

### அவர் காட்டும் வழி சென்று தமிழரசு அமைப்போம் வாரீர்!

கொடியுரிமை, குடியுரிமை, வாக்குரிமை, மொழி உரிமை, நில உரிமை, அரசுரிமை என எல்லா உரிமைகளையும் இழந்து அரசியலில் அநாதைகளாக ஆக்கப்பட்டுள்ள தமிழ் இனம் தனது இறுதிப் போராட்டத்தை நடாத்தியே தீரவேண்டும் என்று உறுதி பூண்டு அக்டோபர் இரண்டில் போர் முரசும் கொட்டப்போகிறது.

இப்போர் மற்றவர்களை வாட்டி வதைக்கும் மறப்போர் அல்ல. மாறாக எம்மையே வருத்தி வதைக்கும் தியாகத்தீயில் குதிக்கும் அறப்போராக மலரப் போகிறது. வேறு சொற்களில் விளம்பின். "கத்தியின்றி இரத்த மின்றி யுத்தம் ஒன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தில் நம்பும் யாரும் சேருவீர்" என்று மறைந்த காந்தியக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அன்று விடுத்த வேண்டுகோளுக்கு முழு வடிவம் கொடுக்கும் முறையில் உண்மையின் உறைவிடமாய் விளங்கும் உயர்ந்தோர்—சத்திய சீலர்கள் பங்குகொள்ளும் உலகம் வியக்கும் போராட்டமாக இது மலரப்போகிறது.

போராட்டம் பல துறைகளில் விரிவடைந்து அரசாங்கத்தின் மனத்தையே மாற்றப்போவது உறுதி. போராட்டத்தின் முதற்படியாக—அடித்தளமாக இறை வழிபாடும் தாயின் மணிக் கொடியேற்றமும் நாட்டுப் பண் பாடலும் இடம்பெறப் போகின்றன. மக்கள் இயக்கமாக மலரும் இப்போராட்டம் தமிழ் இனத்தின் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியே தீரும்.

**செய் அல்லது செத்துமடி**

மாந்தருக்குள் ஒரு தெய்வமாக விளங்குபவர் மகாத்மா. அவர் தோன்றிய நாள் அக்டோபர் இரண்டு. அப்புனித நாளில் போர் தொடுக்கும் நாம் அவர் செப்பிய "செய் அல்லது செத்துமடி" என்ற மறைமொழியை எம் தலையாய மறைமொழியாகக்கொண்டு ஒழுக உறுதி பூண்டு விட்டோம்.

**காந்தி காட்டும் வழி**

புறக்கணிப்பு (பகிஷ்காரம்) ஒத்துழையாமை (non Co-operation) உண்மை கடைப்பிடித்தல் (சத்தியாக்கிரகம்) சட்டமறுப்பு (civil disobediance) என்னும் புதுப் புதுவழிகளை கையாண்டு உலகையே வியப்பில் ஆழ்த்தி இந்தியத் துணைக் கண்டத்திற்கும், அதன் வாயிலாக வேறுபல நாடுகளுக்கும் அடிமைத் தளையை அறுத்தெறிய வீரமிக்க விடுதலை வாழ்வைப்பெற்று மகிழ வழிகண்டவர் மாந்தருக்குள் தெய்வம் என விளங்கும் எம் காந்தியடிகள் என்பதை நாம் மறக்க முடியாது. அந்த முறையில் ஈழத்தில் வாழுகின்ற தமிழ் பேசும் இனமாகிய நாமும் அவர் செப்பிய செம்மொழிகளைப் பற்றியும், காட்டிய நல்வழியைப் பற்றியும் சிந்தித்து செயல் ஆற்றல் சிறப்புடையதன்றோ.

**காந்தியும் தமிழரும்**

காந்தி அடிகள் சத்தியாக்கிரகம் (சத்தியத்தை — ஆக்கிரமித்தல்) முதலிய முறைகளை முதலில் தென் ஆபிரிக்காவிலேயே கையாண்டார். இவரின் இவ் நடவடிக்கைகளுக்கு பக்கதுணையாய் இருந்து பணியாற்றியவர்கள் அங்கு குடியேறியிருந்த தமிழர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக வள்ளியம்மை என்ற இளம்தமிழ் மங்கை காட்டிய வீரம் காந்தியடிகளின் வரலாற்றோடு இணைந்து அழியாப்புகழ் எய்திவிட்டது. காந்தி அடிகள் தமிழரோடு நெருங்கிப் பழகியதால் அவர்களின் மொழியிலும் அவருக்கு ஈடுபாடு ஏற்பட்டது. தமிழருக்கு எழுதும் கடிதங்களுக்கு தமிழில் தன்கையெழுத்தை எழுதும் அளவிற்கு விடுதல் அறியா விருப்பு தமிழ் மீது அவருக்கு ஏற்பட்டு விட்டது. இதனால் திருக்குறளிலும் தமிழ்ப் பழமொழிகளிலும் அவர் உள்ளம் தோயத் தொடங்கியது. எம்மவர் வழங்கும் பல பழமொழிகளுல் ஒரு பழமொழி அவரைப் பெரிதும் கவர்ந்தது. அதுதான் 'திக்கற்றவருக்கு தெய்வம் துணை' என்ற பழமொழி இதை அடிக்கடி அவர் சொல்லி மகிழ்வதுண்டு.

**திக்கற்றவருக்கு தெய்வம் துணை**

இதனால் திசைதெரியாது தத்தளிக்கும் மக்களுக்கு முழுப்பக்க துணை தெய்வம் என்பது அவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. சிந்தை நொந்து செய்வது என்னவென அறியாது தத்தளிக்கும் தமிழ்பேசும இனமாகிய நாமும் அவர் வழி நின்று இதயத்தில் இறைவனின் இன்னருளை ஏற்று எமது உரிமைப்போருக்குரிய செயல்களில் ஈடுபடவேண்டும். உள்ளம் தூய்மையுற்றால் சொல் தூய்மையுறும், செயலும் செம்மை சான்றதாய் அமையும்.

**எம் கடன் பணி செய்து கிடப்பதே**

இதனால் எல்லாப் பழியையும் இறைவன் மீது ஏற்றி விட்டு யாம் சும்மா சோம்பேறிகளாகவோ — வறட்டு வேதாந்திகளாகவோ வாழ வேண்டும் என்று காந்தி அடிகள் கூறினார் என்று எவரும் கருத வேண்டாம். எம்மை இயக்கும் அந்தப்பேராற்றல் (சக்தி) மீது பற்று[illegible] யாம் எம் கடமையை [illegible] தும் தவறாது செய்ய வேண்டும் என்பதே காந்தி அடிகளின் உள்ளக்கிடக்கை "God helps only those who help themselves" (தனக்குத் தான் உதவியாய் இருப்பவனுக்குத்தான் கடவுளும் துணைபுரிவார்) என்ற ஆங்கிலப் பழமொழியையும் யாம் மறத்தல் கூடாது.

ஈழவேந்தன்

'நீ உன் கடமையைச் செய் செய்பவனை எதிர்பாராதே'' என்று பகவத்கீதை பகர்கின்ற மொழியும் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பர் அருள் மொழியும் எம்வாழ்விற்கு வழி காட்டியாய் அமைய வேண்டும்.

இனி காந்தி அடிகள் தன் ஆட்சி அல்லது சுயாட்சி பெறுவதற்கு காட்டும் வழியாதென ஆராய்வோம். இதோ அவர் ஒரு நாடு சுதந்திரம் பெறுவது எப்படி என்று கூறுவதைக் கவனிப்போம். "யான் ஒரு மானிடன் என்று உணர்பவன் மனிதன் இயற்றும் சட்டங்களுக்கு அஞ்சமாட்டான். அவன் இறைவன் ஒருவனுக்கே மட்டும் அஞ்சுவான். அரசாங்கம் இதை இதைத்தான் செய்ய வேண்டுமென்று கூறுவதில்லை. ஆனால் தான் உருவாக்கும் சட்டங்களை ஏற்காவிட்டால் தண்டனைக்குள் உங்களை ஆளாக்குவோம் என்று எச்சரிக்கிறது. எம்மிடத்தில் உள்ள அடிமை உணர்ச்சியினால் அரசாங்கம் விதிக்கும் முறையற்ற-நீதியற்ற சட்டங்களைக் கூட தலைமேற் தாங்கி நடைமுறைக்கு கொண்டு வர முயல்கிறோம். ஆனால் என்று ஒரு மனிதனோ, ஒரு இனமோ இந்த அநியாய-நேர்மையற்ற சட்டங்களை ஏற்பதுதான் ஆண்மைக்கு இழுக்கு என்று எண்ணுகிறதோ அன்றே எந்த அரசாங்கத்தின் கொடுங்கோல் ஆட்சியும் நடைமுறையில் வெற்றிகாண முடியாது. மேற்குறித்த இந்த எதிர்ப்பு எண்ணமே ஒரு இனத்தின்—ஒரு நாட்டின் விடுதலைக்கு திறவுகோலாய் அமையும்."

**பெரும்பான்மை சிறுபான்மை இனச் சிக்கல்**

அடுத்து அண்ணல் காந்தி பெரும்பான்மை, சிறுபான்மை சிக்கல் பற்றிக் கூறும் கருத்தைப் பற்றி சிறிது பார்ப்போம். ஒரு நாட்டின் [illegible] [illegible] நீதியற்ற நேர்மையற்ற சட்டம் அங்கு வாழும் சிறுபான்மை இனத்தையோ இனங்களையோ கட்டுப்படுத்தும் என்று நம்புவது முழு மூடநம்பிக்கை என்றும், தெய்வீக இயல்பிற்கும் மாறுபட்டதென்றும் கூறுகிறார். ஒரு கள்ளர் கூட்டம் களவெடுத்தே வாழ வேண்டுமென்று தீர்மானித்தால் ஒரு நல்லவன் அதற்கு அடிபணியவேண்டுமா? நிச்சயமாக அத்தகைய தீய செயலுக்கு அவன் ஆளாக முடியாது அநீதியான சட்டங்களுக்கு அடிபணிய வேண்டும் என்ற நம்பிக்கை உள்ளவர், அடிமையாக வாழ்வதைவிட வேறு வழியில்லை. ஒரு உண்மை விரும்பி (சத்தியாக்கிரகி) மட்டும் தான் இந்த மூட நம்பிக்கையை முற்றாக தீர்க்கமுடியும்.

**உடல் வலிவா உள்ள உறுதியா பெரிது**

ஒரு உண்மைப் போர் வீரன் தன் உடல் வலியிலும் பார்க்க தனது உயிர்நிலை (ஆன்மீக) வலிவிற்தான் நம்பிக்கை வைப்பான். அரசாங்கத்தின் எண்ணிக்கைத் தொகையையோ அல்லது அதனின் படைபலத்தையோ கண்டு அவன் அஞ்சமாட்டான். துப்பாக்கியின் துணைகொண்டு மற்றவர்களைச் சுட்டுவீழ்த்துவதிலா அல்லது தன்னைச்சுட வருகின்ற படைவீரனைக்கண்டு புன்முறுவல் பூத்து அத்துப்பாக்கியின் சூட்டிற்கு இரையாகி இறப்பினில் இன்பம் காண்பதிலா உண்மை வீரம் உண்டு. சாவை எந்த நேரமும் இறுக அணைக்கக்கூடியவன்தான் உண்மை வீரன்—சத்தியாக்கிரகி இந்த சத்தியாக்கிரக—சட்ட மறுப்பு இயக்கங்களில் ஆண்களும் பெண்களும் நிறையக்கலந்து கொள்ளலாம். இதற்கு உள்ளத்தில் உறுதியும் தன் கொள்கையில் உண்மைப் பற்றும் இருந்தால் போதும் வேறு எவ்வித பயிற்சியும் இதற்குத் தேவையில்லை.

**அறப்போர் வீரன் மறப்போர் வீரனையும் வாழ்த்தினர்**

எம்மான் காந்தி அடிகள் பாரதமணித் திருநாட்டிற்கு விடுதலை பெற்றுக்கொடுப்பதில் வேணவாக்கொண்டிருந்தார். அந்த விடுதலையும் தான் விரும்பிய கொல்லா அறவழியில் (அகிம்சையில்) பெறவேண்டும் என்று விழைந்தார். ஆனால் அதே நேரத்தில் ஆயுதம் தாங்கித்தான் இந்தியாவிற்கு விடுதலைபெற முடியுமென்று சொல்லி பெரும்படை திரட்டி போரிட்ட வங்கச் சிங்கம் சுபாஷ் சந்திரபோஷ் கையாண்ட வழிகளை காந்தி அடிகள் ஏற்காவிடினும் நாட்டின்விடுதலையில் சுபாஷ் காட்டிய ஆர்வத்தை-உலகமே வியக்கும் வீரத்தை—நாட்டுப் பற்றைப் பெரிதும் போற்றினர்.

**காந்தி—செல்வா உள்ள ஒருமைப்பாடு**

மகாத்மா அறப்போர் அடிப்படையில் இந்திய துணைக் கண்டத்திற்கு உரிமைபெற்றுக்கொடுக்க முயன்றபோது சில இடங்களில் வன்முறை (பலாத்காரம்) தலைதூக்கியதுண்டு; வன்முறையை காந்தி அடிகள் வெறுத்தாலும் வன்முறை எங்கேயோ ஒரு இடத்தில் தலைகாட்டியதற்காக இந்தியாவின் உரிமைக்காகப் போராடுவதை அவர் நிறுத்தவில்லை. பெரும் விடுதலைப் போராட்டங்களில் இத்தகைய சிறு தவறுகள் தவிர்க்கமுடியாதென்பதை உணர்ந்தார்.

ஈழத்தின் காந்தி — அறத்தின் வடிவமென நாம் போற்றுகின்ற திரு. செல்வநாயகம் அவர்கள் கூட 1957ல் ஒப்சேபர் (observer) செய்தி இதழுக்கு விட்ட அறிக்கையில் "Threat of Violence Shall not deter me from performing my Sacred task to my Community (வன்முறை அச்சுறுத்தலுக்கு அஞ்சி என் இனத்திற்கு யான் ஆற்றவேண்டிய புனிதமான கடமையை செய்யத் தவறேன்) என்று குறிப்பிட்டிருந்தார்.

**செல்வா வழியில் நிற்பின் வெற்றி நமதே!**

காந்திய வழியில் நின்று கொல்லாமையில் (அகிம்சையில்) முழு நம்பிக்கை வைத்து கலங்கி நிற்கும் தமிழருக்கு கலங்கரை விளக்கமாய்த் துலங்குகின்ற தூய மூர்த்தி எங்கள் தந்தை செல்வநாயகம் அந்த அன்புத் தந்தை அக்டோபர் இரண்டில் தொடுக்கவிருக்கும் அறப்போருக்கு எம்மை அணிவகுத்து நிற்குமாறு அன்புக்கட்டளையிட்டுள்ளார். எம் தந்தையின் புகழ் பாடும் ஈழத்துப் பெண் கவிஞர் ஒருவர் பின்வருமாறு எம்மை அறப்போருக்கு அழைக்கிறார்.

"மெல்லமெல்லப் பணிபுரியும்
மேதை செல்வநாயகம்
சொல்லுகின்ற பாதையிலே
செல்லுகின்ற வீரர் நாம்
கொல்லுகின்ற வறுமை
எம்மைக்
கொடுமை செய்துவாட்டினும்
கொள்கையுரம்வாய்ந்தவுளம்
கொண்டறப் போராடுவோம்"

நாமும் அவரின் உள்ளக்குமுறுதலுக்கு தலைசாய்த்து உயிர் நமக்கு வெல்லம் (சர்க்கரை) அல்ல இதை இனிய உரிமையைப் பெற்று உலகில் உயர்ந்தோராக ஈழத் தமிழ்பேசும் இனம் வாழ வழிவகை செய்ய உறுதி பூணுவோமாக.

உண்மைக்கு என்றும் அழிவில்லை. நேர்மை என்றும் நிலைத்து நிற்கும். அறம் இறுதியில் வெல்வது உறுதி. அதனால் அனைவரும் புன்னகை பூக்க பூரிப்போடு அறப் போர்க்களம் நோக்கிப் புறப்பட அணிவகுத்து நில்லுங்கள்—எம் தொண்டர் படையில் சேருங்கள் என வேண்டி நிற்கிறோம் வெற்றி நமதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமங்கை செலீனா

-கலை நிதி-

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இரவு மணி இரண்டு! செலீனா, தன் இறுதித் திட்டத்தைச் செயற்படுத்த தன் சுய உருவிலேயே ஆயத்தமானாள்! 'இறுதியாக 'அல்லாவை'—வங்கத் தலைவனை—கடமை வீரனும் தன் தந்தையை வணங்கி—, தந்தையே! இவள் தங்கள் மகளாகவே செயற்பட்டு வருகின்றாள்! மடிந்திடநேரிடினும் தங்கள் மகளாகவே மடிந்திடுவாள்'! என உறுதி கூறி, மூன்று திங்களாக—பகலென்றும் இரவென்றும் தரம்பிரித்தறியாத கண்கள்வெட்ட வெளியை ஊடுருவிச் செல்ல மரத்து விட்ட அவளது பஞ்சணைய பாதங்கள் அதனைத் தொடர்ந்திட பதுங்கிப் பதுங்கி—குறிப்பிட்ட இடத்தினை அடைந்துவிட்டாள்!

அங்கே உள்ள காவலர்கள் தூங்கி வழிந்து கொண்டிருந்தமை செலீனாவின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்குவதாயமைந்து விட்டது! அவளும் அதைத்தானே எதிர்பார்த்திருந்தாள்! மணிக்கூண்டுக் கோபுரத்தின் படிகளில் சலனப்படாது அடிமேலடியெடுத்து முன்னேறுகின்றாள்! கோபுரத்தின் இறுதிப்படியை அவள் கால்கள் நெருங்கிவிட்டன! உச்சிப்படியில் அவள் கால்கள் உறுதியாக நிற்கின்றன!

**அதோ! அவளது கரங்கள் வங்கத்தின் சுதந்திரக் கொடியைக் கட்டுவதில் சுறுசுறுப்புடன் இயங்குகின்றன! பறக்கவே செய்துவிட்டாள் சுதந்திரக் கொடியை! அவளது எண்ணம் ஈடேறியே விட்டது! ஆம் வங்கத்தின் சுதந்திரக்கொடி இளந்தென்றலில் - வெற்றிக்கரமசைப்பது போன்று அசைந்தே கொண்டிருக்கின்றது! ஒரு கணம்! அதனை உற்றுநோக்குகிறாள் செலீனா! உணர்ச்சி வசப்பட்ட அவள் தன் நிலை மறந்தாள்! தான் நிற்கும் இடத்தினையும் மறந்தாள்! 'வாழ்க வங்க மொழி! வெல்க வங்க தேசம்!' எனக் கூறினாள்.**

அவ்விடத்தில் ரோந்து சுற்ற வந்த இராணுவத்தினரின் காதுகளில் அவள் குரல் ஓங்கி ஒலித்து விட்டது! குரல் வந்த திசையை உற்று நோக்குகின்றனர்! அவர்களது மனம் சிதைபட்டது போன்றதோர் உணர்ச்சி! அங்கே வங்கத்தின் சுதந்திரக் கொடி கம்பீரத்துடன் பறந்துகொண்டிருந்தது! அதன் அருகே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள்! காவலர்களையும் மீறி—அதுவும் ஒரு பெண்—இத்தகையதொரு துணிகரமான செயலைச் செய்து விட்டாளேயென்ற அவமான உணர்ச்சி அவர்களை உந்த அவளை நோக்கி துப்பாக்கியைக் குறிவைத்து விசையையும் அழுத்திவிட்டான் ஒரு வெறியன்!

தன்நிலை மறந்து நின்ற செலீனா, வேட்டோசை பட்டதும் படிகளில் உருண்டுருண்டு வங்க பூமித்தாயை முத்தமிட விரைவது போல் உருண்டுகொண்டேயிருந்தாள்! உணர்விழந்த அவளுடல் நிலமகளைத் தழுவியதும், தோழர்களின் மத்தியில் நின்ற மேஜர் அருகே சென்று பார்த்தான். அந்த உடல் உயிருக்கு மன்றாடும் நிலையில் கூட அவனது காம உணர்வு தலைதூக்கத்தான் செய்தது! பொங்கும் அழகு அந்தக்களையிழந்த முகத்தில் அப்போதும் தவழ்ந்து கொண்டேயிருந்தது! பதினெட்டே வயது — பார்ப்போரைக் கவர்ந்திடும் அழகல்லவா?

அவளது அந்த நிலையிலும் மேஜர் மயங்கியே விட்டான்! ஆசானின் சிஷ்யர்கள் அல்லவா? எனவே மேஜரின் எண்ணத்தைப் பிரதிபலிப்பவர்களாக — செலீனா உயிருடன் இருக்கிறாளா என்பதனை அதி அக்கறையுடன் பரிசோதிக்கின்றனர். மயக்கமடைந்துள்ள அந்த நிலையிலும் அவளது கை துப்பாக்கியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தது! துப்பாக்கியைத் தம் வசமாக்கிவிட்டு அவளது மயக்கத்தைத் தெளிவித்தனர்.

தன் உணர்வினை அடைந்த செலீனா — அவர்களை ஏறெடுத்துப் பார்க்கின்றாள்! இராணுவத்தினர் பெண்கள் வரையில் எவ்வளவு கண்ணியமானவர்கள் என்பதனை அவள் நன்கு அறிந்திருந்தாளே? அங்கே — வெறியன் யஹ்யாகானின் இராணுவப் படையில் உருவான கண்ணியமான கடமை வீரன் மேஜர் சையர் ஹாதியைக் கண்டாள்! அவளது குரோதம் நிறைந்த அனல் கக்கும் விழிகளால் அவனை ஊடுருவிக் கொண்டருந்தாள்!

மங்கையரைப் பகைத்துக் கொண்டால் தன் எண்ணம் இச்சை நிறைவேறாது என்பதனை நன்கு தெரிந்து வைத்திருந்தானே அவன் எனவே, அவன் ஏதுமறியா அப்பாவி போல் முன்னே புறப்பட்டான்! விலங்கு மாட்டப்பட்டகரத்தினளாய் செலீனா பின்னே அழைத்துச் செல்லப்பட்டாள்!

ஜீப் வண்டியில் ஏறுமுன் இறுதியாக மணிக் கூண்டு கோப்புரத்தை ஏறெடுத்துப் பார்க்கிறாள்! அங்கே—வெறியர்களின் கோரத் துப்பாக்கிக்குப் பலியாகியும் அந்த சுதந்திரக் கொடி குற்றுயிருடனிருந்தாலும் கம்பீரத்துடன் வெற்றி நமதே சென்றுவா! எனக் கையசைத்து அவளுக்கு விடை கொடுப்பது போன்றிருந்தது!

இரு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் வங்க பூமியை அணைத்தன! தன் தாய் நாட்டினை விட்டுப் பிரிகின்றோமே தன்னை வளர்த்து வீராங்கனையாக்கிய தைகல் நகரை விட்டுப் பிரிகின்றோமே என்ற ஏக்கத்தினால் — பிரிவாற்றாமையினால் எழுந்த கண்ணீர்த்துளிகளா? அல்லது—வெறியன் சையத் ஹாதியைப் பழி கொள்ளவிருக்கும் துப்பாக்கிக் குண்டுகளா அவை அல்லது தன் கடமையைக் கண்ணியத்துடன்—கட்டுப்பாட்டுடன் நிறைவுறுத்திவிட்டோமே என்ற வெற்றி மணித்துளிகளா? எப்படியிருப்பினும் நிட்சயமாக அது கோழையின் கண்ணீரல்ல!

மறுநாளிரவு அந்த வெறியனின் உத்தரவின் பேரில் அவனிருப்பிடம் அழைத்து வரப்பட்டாள் செலீனா! அந்தப் பூவையின் உடலைப் புல்லிட பாகு மொழிகளையும்-பரிசுப் பொருள்களையும் அள்ளி வீசினான்! அவளது அழகில் மயங்கி ஏதேதோவெல்லாம் பிதற்றினான். ஆனாலும் — அவன் அவளிடம் சற்று நிதானமாகவே பழகினான்! ஏனெனில் எவருமே செய்யத் துணியாத செயலினைச் செய்தவளல்லவா அவள்!

மங்கையே! உன் வீரத்தை மெச்சுகின்றேன். வங்கத்து மங்கையருள் பெரும்பாதியைச் சுவைத்தவன் நான் ஆனாலும் உன் போன்ற அழகும் இளமைப் பூரிப்பும் வீரமும் கொண்ட பெண்களை இன்றுவரை நான் கண்டதில்லை! பகலிலே படு[illegible]! இரவிலே பஞ்சணை மீ[illegible]வும் மங்கையரும்! இதுதான் எம் தலைவன் யஹ்யாகான் காட்டிய வாழ்க்கைவழி! ஆனால் உன்னை — நான் மற்றவர்களைச் சுவைத்துக் கொண்டதுபோல சுவைத்துக் கொன்றிட நினைக்கவில்லை! என் உள்ளத்தை அடக்கி ஆளும் சக்தி உன்னிடமே உண்டு. நேற்று உன் பார்வையைத் தாங்கும் சக்தியை இழந்து தலைகுனிந்து நின்ற சமயம் நீயே உணர்ந்து விட்டிருப்பாய்! உன்னை என் இதயத்தே கொலுவிருத்தி இறுதிவரை வாழ்விக்கவே விரும்புகின்றேன். இணங்கிவிடு செலீனா! என் வாழ்வினை வளமாக்கிட கைகொடுப்பாயேயானால் எத்தனையோ உயிர்களின் வாழ்வினை வளமாக்கியவளாவாய்! அன்றேல் - தொடர்ந்து மேன்மேலும் கொலைவெறியனாவது நிட்சயம்.

தன்னை மட்டுமே எண்ணி வாழும் சுயநலப் புலியா அவள்? தான்மட்டும் வாழ வேண்டுமென அவள் எண்ணியிருந்தால் — சிறுகச் சிறுகத் தன்னை அழித்துத் தன் தாய் நாட்டின் சுதந்திரமொன்றினையே நெஞ்சகத்திருத்தி — இன்று, இந்தக் கயவன் முன் நின்றிடத் தேவையில்லையே? சில பெரும் மனிதர்கள் போல் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தால் — இன்று -துரோகிகளின் மத்தியில் மாபெரும் துரோகியாக மாடமாளிகையிலல்லவோ வாழ்ந்திருப்பாள்! வங்கப் போ[illegible]லே இத்தனை தந்திரங்களைக் கையாண்ட அந்த செந்தழல் உள்ளத்தாள் இந்தப் பேயனின் பாகு மொழிக்கா உருகுவாள்? அவளது ஒரே ஒரு நோக்கம் அவனால் மானபங்கப்படுத்தப்பட்ட தாய்க்குலத்திற்கு அவனது உயிரையே காணிக்கையாக்குவதே! அந்த வேளையை ஆவலுடன் எதிர்நோக்கினாள் செலீனா.

"பேயனே! உன் பாகு மொழிகட்கும் பரிசுப்பொருள்கட்கும் மயங்கி இணங்குபவள் அல்லள் இந்த செலீனா. விடுதலை வேட்கைக்கு — சுதந்திர உணர்ச்சிக்கு விலைபேசும் உனக்கு இந்த செலீனாவின் செயல் ஒரு சவால்! ஆயிரமாயிரம் பெண்களின் கற்பினைச் சூறையாடும் போதும் — ஏதுமறியாப் பச்சிளம் பாலகரை உன் படைகளின் துப்பாக்கி ரவைகள் சுவைத்தபோதும் இளகாத உன் இதயம் இந்த செலீனாவிற்காக இளகி ஏக்கம் கொண்டுள்ளதா? தம் கற்பினைக் காப்பதற்காக -அவர்கள் உன் படைகளுடன் போராடும்போதிட்ட அவலக் குரல் இன்றும் என் உணர்வை — உயிரைக் கசக்கிப் பிழிகின்றது."

பெண்பித்துக் கொண்ட பேயனே! உன் தலைவன் யஹ்யாகான் காட்டிய வழி -ஏதுமறியா அப்பாவிப் பெண்களை — குழந்தைகளை — சிறுவர்களைப் பங்கப்படுத்தி — அதிலே இன்பங் காண்பது தானென்றால் இந்த செலீனா அதற்கோர் முடிவினை இன்று தந்திடுவாள்! எனத் தன்னுள் எண்ணியவளாய் — 'வங்க தேசம் சுதந்திரமடைந்துவிட்டது! வங்கத்தை தனிநாடக அங்கீகரித்துவிட்டோம்' என உன் தலைவன் யஹ்யாகானிடமிருந்து அதிகார பூர்வமான அறிக்கையொன்றினைப் பெற்று — எம் தலைவன் முஜிபுர் அவர்களையும் விடுவிப்பாயேயானால் — அடுத்த கணம் இந்த செலீனாவை நீ அடையலாம்! அக்கணமுதல் இந்த செலீனா உன் அடிமையாம்! ஆம் விலைமதிப்பற்ற களங்கமற்ற கற்பினை உயிரினை எம் நாட்டிற்காக — உயிரனைய மொழிக்காக விலையாக்குகிறேன் எனக் கூறி அவனை நோக்கினாள்! அவனோ சிறுகச் சிறுக மது அரக்கனின் கோரப் பிடிக்குள்ளாகிக் கொண்டிருந்தான்.

செலீனா உன் சொற்படி எம் தலைவனிடம் சென்று கேட்டேனேயானால் —இந்த சையத் ஹாதி மீண்டும் உயிருடன் உன்னைக்காண வருவான் என எண்ணுகின்றாயா? நாயைச்சுடுவது போல் சுட்டு வீழ்த்திடுவானே! அந்த சர்வாதிகாரி!

உயிரைப் பெரிதென மதித்திடும் மேஜர் அவர்களே! தம் உயிரைத் துச்சமாக மதித்த வங்கத்து மக்களின் முன் நீயோர் புழு! இப்படியாக நீ சொல்வாயென்று எதிர்பார்த்திருந்தேன். உன் உயிர்மீது இத்தனை அக்கறை கொண்டுள்ளாயே? உன் கையால் உன் படைகளின் கைகளால் இலட்சோப இலட்சம் உயிர்கள் வதைபட்ட போது உனக்கு அந்த உயிர்கள் மீது ஒரு துளியாகுதல் இரக்கம் பிறந்ததா பேயனே! எம் உயிர் எமக்கு வெல்லமல்ல என்பதை இப்போதாகுதல் உணர்ந்து கொள்! எம் உயிரைக் கொடுத்தும் மொழியைக் காப்போம் நாம்!

பச்சிளம் பெண்ணொருத்தியினால் இன்று ஏமாற்றப்பட்டு விட்டோமே என எண்ணியெண்ணி உள்ளம் குமைந்த மேஜர் என்றுமில்லாதவாறு மது அரக்கனை அளவுக்குமீறி அணைத்துக் கொண்டான். செலீனா எதற்குமே தயாராக இருந்தாள். அவனது வாய் ஏதேதோவெல்லாம் குளறிக்கொண்டிருந்தது. மதுவின் போதையும் மங்கையின் போதையும் தலைக்கேறியதும் செலீனாவை நாடிட முற்பட்டான்! ஆனால் அவனால் தன் சிறுகுன்றொத்த உடலை அசைக்க முடியவில்லை — பஞ்சணைமீது அப்படியே விழுந்து விட்டான் சற்று நேரத்திற்கெல்லாம் நித்திராதேவி பலமாக ஆட்கொண்டுவிட்டாள்!

பழிதீர்க்கும் வேளையைப் பார்த்திருந்த பாவையவளின் வேளையும் வந்திட்டது. அவன் தலையணை இடையே கிடந்த தானியங்கித் துப்பாக்கியை எடுத்தாள்! தாய்க்குலமே புழுப்போல உங்களை துடிக்கவைத்து உயிரைப் பறித்த இந்தப் புல்லனின் உயிரை உங்கட்குக் காணிக்கையாக்குகின்றேன் பெண் உள்ளம் மென்மையானதுதான் — ஆனால் அந்த உள்ளம் வஞ்சம் கொண்டால் பெருந் தீப்பிழம்பாகிவிடும் என்பதனை என் மூலம் உலகம் உணரட்டும்! எனக்கூறிவிட்டு, அவசரம் அவசரமாக வெற்றுத்தாள் ஒன்றினை மேஜரின் மேசை மீதிருந்தெடுத்து அவனது பேனா கொண்டு எதுவோ எழுதுகின்றாள் செலீனா! அதனைத் தன் கையினுள் அடக்கிக் கொண்டு மறுகையால் மேஜரின் நெஞ்சை நோக்கித் துப்பாக்கியைக் குறிவைத்து விசையையும் அழுத்திவிட்டாள்!

டுமீல் ... டுமீல்...டுமீல் என்ற வேட்டோசை அந்த சுற்றுவட்டாரத்தில் நிலவிய மயான அமைதியைக் குலைத்தது! சில விநாடிகளுக்குப் பின் மீண்டும் எழுந்தன மூன்று வேட்டேறுகள்! காவற்காரர்கள் பதறித் துடித்து மேஜர் சையத் ஹாதியின் அறைக்குள் நுழைந்தனர்!

படுக்கையறையில் இரத்த வெள்ளத்தில் நீந்திய இரு பிணங்களைக் கண்டனர். ஒன்று செலீனா! மற்றது சையத்!

அமைதி பொங்கும் முகத்துடன் வீராங்கனை செலீனாவின் அருகே ஓர் சுவடி தென்பட்டது! எடுத்துப் படித்தார்கள்!

**நான் ஒரு எதிரியைக் கொல்லப்போகின்றேன். பிறகு என்னையும் சுட்டுக் கொள்ளப் போகின்றேன். எனது தாயகத்தின் விடுதலைக்காக நடைபெறும் வீரப் போரில் எனது இறுதிக் காணிக்கை இது. வெல்க வங்க தேசம்!**

அந்த வீர மங்கை தன் உயிரை வங்க விடுதலைக்குக் காணிக்கையாக்கியது அவம் போகவில்லை. ஆம்! வங்கம் வென்றனர். தங்க வங்கமமைத்தனர்! இன்று அந்த வீரமங்கையின் ஆத்மா நிட்சயமாக சாந்தியடைந்திருக்கும்!

## எண்ணிப்பார் தமிழா....!

"அக்கரை மாணிக்கம்"

ஆண்டவர்கள் எப்போதும் ஆண்டதில்லை
அடிமைகளும் அடிமைகளாய் வாழ்ந்ததில்லை
மாண்டவர்கள் மீண்டுவரும் காலமிது
மனச்சாட்சி உள்ளவர்கள் துன்புற்றாலும்
மீண்டவர்கள் நல்வா[illegible]வு வா[illegible]ந்ததுண்டு
மென்மேலும் துன்ப[illegible] கண்டதில்லை
பாண்டவர்கள் கதைத[illegible]ன் இன்றெமக்கென்றாலும்
பாரதப்போர் முடிவென்ன? தர்மம் வெல்லும்...

வென்றவர்கள் வென்றுகொண்டே இருந்ததில்லை
வீழ்ந்தவர்கள் வெல்வதற்கும் நேரமில்லை
என்றென்றும் வெற்றிஒரு பக்கச்சார்பாய்
இருந்ததாய் வரலாற்றில் குறிப்புமில்லை,
என்றேனும் ஓர்நாள்நாம் இனஉணர்வால்
இஸ்ரவேல் மக்களைப்போல் ஒன்றுபட்டால்
வென்றோரை வெற்றிகொள்வோம் இதுஉறுதி
விரைந்துநமை உலகமெலாம் உற்றுநோக்கும்...

வங்கத்து மக்களன்று பட்டபாட்டை
வையகத்தார் கண்டுமதைத் தடுக்கவில்லை
செங்குருதி ஆறாகஓடக் கண்டும்
சிறிதுமதை உலகமன்று மதிக்கவில்லை
தங்களுக்கோர் தனிநாட்டைப் போரிலந்தத்
தன்மானம் மிக்கவர்கள் பெற்றபின்பு
எங்கிருந்தோ வாழ்த்திவந்த வாழ்த்தையெலாம்
எண்ணிப்பார் தமிழா இதுதானுலகம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபுத் தமிழுடன் சிங்களத்தமிழ் போட்டி

## இலங்கை வானொலியில் "ஆமாம் சாமி" கோஷ்டி

இலங்கை வானொலியின் தமிழ்ப் பகுதி — இலங்கை "விஷெலி" என்று பலர் வர்ணிக்கின்றார்கள் —இப்பொழுது தபால் தந்தி அமைச்சரின் ஆட்சியில் இயங்குகின்றதாம். இத்தமிழ்ப்பகுதியின் ஆலோசனைச் சபை அவருடைய தலைமையில் நடைபெறுகின்றது. ஆலோசனைச் சபையில் அரசாங்கத்துக்கு "ஆமாம் சாமி" போடும் அருவருப்புத் தமிழரும் நியமிக்கப்பட்டுளராம். இச்சபையின் பிரதிநிதிகளாகப் பின்வருவோரும் "ஆமாம்" பணிபுரிகின்றனர்:

திரு. விநோதன். டாக்குத்தர் சிவத்தம்பி, 'பிரேம்ஜி' இரா. சிவலிங்கம்...

இவர்களிற் சிலர் முன் செய்த பணி தமிழ் நாட்டிலிருந்து ஈழத்துக்கு வந்த நல்ல தரமான தமிழ்ப் பத்திரிகைகளை நிறுத்தியதுதான். இனி இவர்கள் ஈழத் தமிழைச் சிங்களத் தமிழாக்கித் தருவார்களாம். இப்பொழுதே டசின் கணக்கில் சிங்களச் சொற்கள் தமிழில் புகுத்தப்பட்டுள்ளன. அருந்தமிழ் இசை ஆரிய சிங்கள இசையாக்கப்பட்டாலும் ஆச்சரியப்படவேண்டாம். சிங்களத் தமிழ் அரபுத்தமிழுடன் போட்டி போடவுந் தொடங்கி விட்டதாம்.

சிங்களத் தமிழுக்கு ஆதரவாக "விஷெலி" தமிழ்ப் பகுதி நிருவாகம் முற்றுமுழுதாக மாற்றி அமைக்கப்படும்; முன்னைய தமிழ் அமைச்சர் ஒருவரால் அங்கு புகுத்தப்பட்டவர் இப்பொழுது பொறுப்பான பதவி பெறுவதற்குத் தம்மைத் தகுதியாக்கிவிட்டாராம். இன்னும் பல சங்கதிகள் இருக்கின்றன. அடுத்த வாரம் வரை கொஞ்சம் பொறுங்கள்!

## வந்த கடிதம் பிரதமருக்கே திருப்பி அனுப்பப்படும்!

தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக்கோரிக்கை குறித்து பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு 'உங்கள் ஆறு அம்சக் கோரிக்கை' கிடைத்தது என்று பிரதமர் பதில் அனுப்பியிருக்கிறார்!

இந்தப்பதில் உத்தியோக பூர்வமாகச் சிங்களத்திலும் தமிழில் மொழிபெயர்ப்பு மாக அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்மொழி பெயர்ப்பில் பிரதமரது கையொப்பம் இல்லை.

இந்தக் கடிதத்தைப் பிரதமருக்கே திருப்பி அனுப்பி விடுவது என்று தமிழர் கூட்டணி தீர்மானித்துள்ளது.

## அறப்போரில்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து தீரமாய்ச் செயலாற்று அன்று முதல் இன்றுவரை உனக்காகவே அடிபட்டு தளர்வுற்ற தந்தை இனியும் உனக்காக துணைவருவார்! அவரின் சுண்டுவிரல் அசைவுக்காய் காத்திரு! அவருடன், உடுப்பிட்டிச் சிங்கம் மூதூரின் தங்கம், வட்டுக்கோட்டை அமிர், கோப்பாயின் கதிர், மட்டுநகர் ராசு, மலைநாட்டின் தொண்டன், கற்குடா நாயகம், களம் கண்ட மாணிக்கம் இவர்களுடன் —

இன்னுமுள்ள தலைவர்கள் அடங்காத் தமிழர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஓரணியில் அழைத்துச் சென்று விடுதலைப் பாதைக்கு வழி காட்டத் தயாராகி விட்டனர். இனிமேல் நமக்கு அச்சம் இல்லை இடையிலே குறுக்கிடும் புல்லுருவிகளைத் தள்ளி வைத்துவிட்டு—புனிதப் போருக்குத் தயாராகு! ஒவ்வொரு தமிழ் மகனையும் ஒரு 'சேக் முஜிபராக' மாற்று! வங்காள தேசத்தில் விடுதலை வேட்கை கொண்டு வீர இரத்தம் சிந்திய வேங்கை நிகர் வீரர்களுக்கு ஈழத் தமிழ் வீரர்கள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை எடுத்துக்காட்ட அணிதிரண்டுவா!

துடிக்கும் இரத்தத்தை திரமாய்ச் சிந்திடத் தியாகிகள் காத்திருக்கிறார்கள்! தன்னாட்சி தர மறுக்கின் தனியாட்சி கோருகின்ற தணியாத தாகத்துடன் காளைகள் காத்திருக்கிறார்கள்! தனது உதிரத்தில் உருவாக்கும் 'தமிழ் கரு' சுதந்திரத் தமிழனுக மண்ணிலே விழவேண்டும் என்ற வேகத்தோடு வீரத் தமிழ் மகள் காத்திருக்கிறாள் பல்லில்லாக் கிழவன் உள்ளத்து உறுதியோடு காத்திருக்கிறான் பொற்காலம் காண!

'நாம் எல்லாம் இருக்கிறோம் நற்பணியில் ஆவிவிட தமிழ்த் தலைவர்களே! எம்மைப் பாவியுங்கள் தமிழ் விடுதலைப்போராட்டக் களத்திலே எமது 'செங்குருதி ஆற்றை ஓடவிட எமக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்' இப்படிக் கூவுங்கள் இன்ற மிழ் மக்களே!

தமிழினத்தின் தலைவனே! எம் இனிய தந்தையே! சீர்மிகு தமிழ் வானின் சிங்கார நிலவே! ஊடுலகம் போற்றுகின்ற உத்தமத்தலைவனே! எம்மினிய உயிரே! இதோ.

உனது ஆணைக்காகக் காத்திருக்கும் அணியைப்பார்!

தூணை நிகர்த்த தோள்கள் துடிப்பதைப்பார்!

புறநானூற்றுக்காட்சி புத்தெழில் கொண்ட புதுமையைப்பார்!

'ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை ஆள நினைப்பதில் என்ன விந்தை' என்ற உணர்ச்சிக் கவி காசி அண்ணாவின் வீரமிகு கவிதை எமது நாவில் ஒலிப்பதைக் கேள்!

சுட்டு விரலை உயர்த்திவிடு தூய தலைவனே! செங்குருதி சிந்தி செந்தமிழைக் காப்பாற்று என்று ஒருவார்த்தை செப்பிவிடு!

காத்திருக்கிறோம் களம் காண! கன்னித் தமிழ் வளம் காண! என்று எட்டுத் திசையில் இருந்தும் ஏங்கித்துடித்த இளைஞர்க்கு அரிய பெரும் விருந்தாக அமையப் போகிறது அகிம்சைப் போர்!

அக்டோபர் 2ம் நாள் அண்ணல் காந்தி அவதரித்த புனிதநாள். ஆதவன் அஸ்த்தமிக்காக, சாம்ராட்சியம் என்று ஆணவத்தால் ஆர்ப்பரித்த ஆங்கிலேய ஏகாதிபத்திய வாதிகளையே அடிபணிய வைத்த அகிம்சாமூர்த்தி அவதரித்த நாளில் ஆரம்பமாக இருக்கும் அறப்போர் வெற்றி பெற்று அன்னைத் தமிழ் அரியணை ஏறும் நாளை ஆவலுடன் எதிர்பார்ப்போம்! காவலர்கள் காட்டும் பாதையிலே கட்டுப்பாடு குலையாமல் கண்ணியமாக எமது கடமையைச் செய்ய களம் நோக்கிப் புறப்படுவோம்!

—வேலன்.

## காசி ஆனந்தன் உடல் நலக் குறைவு

வெலிக்கடைச் சிறைச் சாலையில் இன்று (1-10-72) 114வது நாளாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் வயிற்றுக் கோளாறு காரணமாக கடந்த மூன்று வாரங்களாக கஷ்டப்பட்டு வருகிறார்.

காசி ஆனந்தன் சுகவீனம் சம்பந்தமாக தந்தை செல்வா நீதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள ஓர் அவசரத்தந்தியில்; தடுப்புக்காவலிலிருக்கும் காசி ஆனந்தன் கடுமையான நோயினால், வருந்துவதாக தாம் அறிவதாகவும் அவருக்கு போதிய வைத்திய சிகிச்சை அளிக்கப்படவில்லையென்றும் தாம் கேள்விப்பட்டதாகவும், உடனடியாக நல்ல வைத்தியம் ஒழுங்குசெய்யும் படியும் கோரியுள்ளார்.

## நல்லையில் பாரதி விழா!

நல்லை பாரதி மன்றத்தினர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் மதுர கவி நாகராஜன் அரங்கில் இவ்வாண்டு 'பாரதிக்கு' எடுக்கப்போகும் விழா பெருவிழாவாக அமைய விருக்கிறது.

4.10.72ல் ஆரம்பிக்கும் பாரதி விழா தொடர்ந்து ஐந்து நாட்கள் அதாவது 8.10.72 வரை நடைபெறும். விழாவில் சிறப்பு அம்சங்களாக 'தமிழ் முழக்கம் செய்வோம் வாரீர்' எனும் தலைப்பில் ஈழத்தின் தலைசிறந்த கவிஞர் பங்குபற்றும் கவிதை அரங்கும், 'பாரதி ஓர் சர்வதேச கவி அல்ல பாரதி ஒரு தேசிய விடுதலைக் கவியே' எனும் தலைப்பில் உரை நடை விற்பன்னர்கள் கலந்துகொள்ளும் ஒரு பட்டிமன்றமும், 'பாஞ்சாலி சபதம்' வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், இன்னும் நாட்டின் புகழ்பூத்த மேடைப் பேச்சாளர் ஆற்றும் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன. விழா தினமும் மாலை 5-30 மணிக்கு பிரபல நாதஸ்வர கலைஞர்கள் அளிக்கும் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

விழாவின் பிறிதொரு சிறப்பு அம்சம் மாணவர், தொழிலாளர், தாய்மாருக்கெனத் தனித்தனி நாட்கள் ஒதுக்கப்பட்டு அந்தந்த நாட்களில் விழாவுக்கு அவரவர்களே தலைமை தாங்குகின்றனர்.

## வட்டுக்கோட்டையின் குரல்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பைடெல்லிக்காரன் அல்லவா கையில் வைத்துக் கொண்டிருக்கிறான்..' என்று அந்தச் சிங்கம் கர்ச்சித்தது.

ஆம், வயது சென்றாலும், சிங்கம் சிங்கம்தான். அதன் வீரம் ஒருபோதும் குன்றுவதில்லை —இதற்கு உதாரணமாகத் திகழுகிறார் பெரியார் ஈ. வே. ரா.

பெரியார் அவர்களைச் சந்தித்த பின்னர் சென்னை சட்டக் கல்லூரியில் அண்ணன் அமிர்தலிங்கம் 'இலங்கையின் புதிய அரசியல் சட்டம்' பற்றிப் பேசுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

சட்டக் கல்லூரிக்கு நாம் சென்றபோது பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச்சிலையொன்று முதலில் நம்மை னும், பொலிவுடனும் எடுத்துரைத்தபோது, அங்கு குழுமியிருந்த மாணவர்களின் முகங்களை ஒருமுறை நோட்டம்விட்டேன். வைத்த விழி வாங்காது — அமிர் அண்ணனின் பேச்சிலும், அவர் கூறி வந்த கருத்துக்களிலும் மனதைப் பறிகொடுத்து அசையாது கேட்டுக்கொண்டிருந்தனர் மாணவர்கள்.

சாதாரணமாக மாணவர்கள்—அதிலும் குறிப்பாகச் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஒரு பேச்சாளர் பேசும்போது குறுக்கிடுவதும் கேள்விகள் தொடுப்பதும், 'ஊய், ஆய்' என்று சத்தம் போடுவதும் வழக்கம். இலங்கையிலுள்ள சட்டக் கல்லூரியிலும் இப்படியான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன.

ஆனால், சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் கட்

**கோவை-மகேசன்**

வரவேற்றது. அதைத் தொடர்ந்து அண்ணனின் உணர்ச்சியினால் உருவாக்கப்பட்ட சட்டக்கல்லூரிமாணவர்கள் எழுச்சிமிகு கோஷங்களுடன் தந்தை செல்வாவையும் அண்ணன் அமிர்தலிங்கத்தையும் மெத்த ஆர்வத்துடன் வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

'ஈழத்துக்காந்தியே வருக, வாழ்க! தமிழர் தலைவா வாழ்க! நாவலர் அமிர்தலிங்கம் வாழ்க! தமிழுக்காக உயிர் தருவோம்! தமிழ்நாடு அமைப்போம்; ஈழத்தமிழர் துயர் துடைப்போம்' என்பன போன்ற எழுச்சிமிகு கோஷங்களை சட்டக்கல்லூரி மாணவர்கள் எழுப்பி வரவேற்றபோது நம் இதயம் பூரித்தது. தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் ஒரே இரத்தம் படைத்தவர்கள்- ஒரே உள்ளம் கொண்டவர்கள். என்பதை சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் அன்று அளித்த எழுச்சிமிகு வரவேற்பினைக் கண்டவர்கள் நிச்சயம் உணர்ந்துகொண்டிருப்பர்.

அண்ணன் அமிர்தலிங்கம், தமக்கேயுரிய பாணியில் ஆணித்தரமாக, அழகான ஆங்கிலத்தில் இலங்கையின் புதிய அரசியல் சட்டம் எப்படி எப்படி எந்தெந்த வகையில் அடிப்படை மனித உரிமைகளையும் ஈழத்தமிழர்களின் உரிமைகளையும் பறிக்கிறது என்பதை வலிவுடட்டுப்பாட்டுடன் அமைதியாக அமிர் அண்ணனின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர் என்றால் அண்ணன் தனது பேச்சாற்றலால் அவர்களை மயக்கிவிட்டாரென்றே கூற வேண்டும்.

ஈழத்து தமிழ் இளைஞர்களை மட்டுமன்றி, தமிழ் நாட்டு இளைஞர்களையும் தனது சொல்வன்மையால் வசீகரித்து விட்டார் அமிர்தலிங்கம். அதனால் தான் தமிழ் நாடு அவரை நாவலர் என்று அழைத்தது போலும்!

தனது பேச்சின் ஒரு கட்டத்தில், 'இப்போது பகல் ஒரு மணி ஆகி விட்டது — மேலும் எனது பேச்சை நீட்டி உங்களைப் பட்டினி போட நான் விரும்பவில்லை' யென்று அமிர் அண்ணன் கூறியபோது. 'இல்லை—நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்' என்று மாணவர்கள் குரல் கொடுத்தது ஒன்றே அமிர் அண்ணனின் பேச்சில் அவர்கள் எவ்வளவு தூரம் சொக்கிப்போயிருந்தார்கள் என்பதை துலாம்பரமாகக் காட்டிற்று.

அமிர் அண்ணன் தனது பேச்சினால் சட்டக்கல்லூரி மாணவர்களைக் கவர்ந்தார் என்றால் சகோதரி மங்கையர்க்கரசியும், அமிர் அண்ணனுக்கு ஈடு கொடுத்திடத் தவறவில்லை.

தனது உணர்ச்சியும் உருக்கமும் நிறைந்த பேச்சினால், சட்ட மாணவர்கள் உணர்ச்சிப்பிழம்பாக மாற்றினர் சகோதரி மங்கையர்க்கரசி.

ஆம், அமிர் தம்பதியரின் எழுச்சிமிகு பேச்சு தமிழகத்து இளைஞர்களையும் வசீகரித்து விட்டது. பேச்சு முடிந்ததும், பகல் உணவையும் மறந்து, மாணவர் கூட்டம் இருவரையும் மொய்த்துக் கொண்டு அன்புத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. சட்டக் கல்லூரி மாணவர்களின் அன்புப் பிடியிலிருந்து விடுபட்டு வெளியேறுவது பெரும் பாடாகி விட்டது!

'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்—வீரங்கொள் கூட்டம், அன்னார் உள்ளத்தால் ஒருவரே' என்ற புரட்சிக் கவிஞரின் வாக்கு எப்படிப் பொருந்துமோ [illegible]

—தொடரும்.

## தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்றும் அக்கடிதத்தில் தெரிவித்து, இது சம்பந்தமாக 24-9-72ல் நடைபெறவிருக்கும் ஒரு கூட்டத்துக்கு வருகை தருமாறும் தந்தை செல்வாவை அழைத்திருந்தார்.

இதற்கு தந்தை செல்வா எழுதிய பதில் வருமாறு:—

"அன்புள்ள இரத்நாயகா

"யாழ்ப்பாணத்திலுள்ள அரசியல் கருத்துப்பற்றி உங்களுக்கு கூறப்பட்டது முற்றிலும் சரியானதே. அதே கருத்தைத்தான் நாடு முழுவதுமுள்ள தமிழ் மக்களும் கொண்டிருக்கிறார்கள். தங்களை, சிங்கள அரசியல் தலைவர்கள் நீதி நேர்மையுடனும் பாரபட்சமின்றியும் ஒருபோதும் நடத்தமாட்டார்கள் என்ற உணர்வு தமிழர்களிடம் இருக்கிறது. தனியாகப் பிரிந்து தனி அரசு ஒன்று நிறுவுவதன் மூலமே இந்நாட்டில் சுயமரியாதையுடன் வாழமுடியும் என்ற கருத்து பொதுவாக தமிழ் மக்களிடமும் குறிப்பாக இளைஞர்களிடமும் பரவிவருகிறது.

இந்நிலையில் உங்கள் முயற்சி வரவேற்கத்தக்கது. எனினும் வேறு ஓர் முக்கிய அலுவலில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால் நீங்கள் கூட்ட உத்தேசித்துள்ள மாநாட்டில் பங்குபற்ற முடியாதவனாக இருக்கிறேன்—"

—இவ்வாறு செல்வா எழுதியுள்ளார்.

**மகாத்மாகாந்தி பொன்மொழிகள்**

மகாத்மாகாந்தி பொன்மொழிகள் என்னும் அரிய நூலை மகாத்மாகாந்தியின் 102ம் ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிட்டுள்ளோம். தேவைப்பட்டோர் 15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அல்லது 75 சதம் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவக்கிரகங்களில் ராகுவும் கேதுவும் ஒருபோதும் ஒன்றாக ஒரு வீட்டில் ஒன்றாக சந்திக்க மாட்டாதென்று சோதிடக்கலையறிந்தவர்கள் கூறுவார்கள். தமிழ் நாட்டு அரசியலிலும், ராகுவும் கேதுவும் போல ஒருபோதும் ஒன்று பட முடியாத இரு துருவங்கள் இருந்து வருகின்றன. தமிழ்நாட்டு அரசியலில் ஏற்படும் மாற்றங்களின் பின்னணியிலும் இந்த இரு 'கிரகங்களே' பெரும்பாலும் காணப்படுகின்றன. தமிழக அரசியலில் உள்ள இந்த ராகுவும் கேதுவும், முதுபெரும் கிழவர்களான ராஜாஜியும் பெரியார் ஈ. வெ. ராமசாமியும்தான் என்பதை வாசகர்களாகிய நீங்களே இதுவரை ஊகித்துக்கொண்டிருப்பீர்கள்.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்திய தேசிய காங்கிரசில் கொஞ்சக்காலம் ராஜாஜியும், பெரியார் ஈ. வெ. ராவும் ஒன்றாக இயங்கினார்கள் என்பது என்னவோ உண்மைதான். ஆனால் காங்கிரசிலிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கத்தையும் திராவிடர் கழகத்தையும் பெரியார் உருவாக்கியதைத்தொடர்ந்து இரண்டு கிழவர்களுக்கு மிடையே அரசியல், சமூக சீர்திருத்தக் கருத்துக்களில் கருத்து மோதலும் போட்டியும் வளரத்தொடங்கி விட்டது.

அன்று ஏற்பட்ட பிரிவினையின் பின்னர் இரண்டு முதிய தலைவர்களும், தமிழக அரசியலைப்பொறுத்தமட்டில் இடசாரி, வலசாரியாக மாறி மாறி வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்துக்கு ஒன்று சொல்வேன் — 1967ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் காமராஜர் பக்கம் நின்றார். மூதறிஞர் ராஜாஜியோ பேரறிஞர் அண்ணாவின் பக்கம்— தி.மு. கழகத்தின் பக்கம் நின்றார். 1971ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் சமயத்தில் இருவரும் இடம்மாறினர். பெரியார், கழகத்தின் தீவிர ஆதரவாளராக இருந்தார். ராஜாஜியோ காமராசரையும் காங்கிரசையும் ஆதரித்து பிரசாரம் செய்தார்.

அரசியல், சமூக சீர்திருத்தக்கொள்கைகளில் இரண்டு தலைவர்களுக்குமிடையே இப்படிக்கடுமையான கருத்து மோதல்கள் இருந்து வந்தபோதிலும் இருவரும் மிகவும் நெருங்கிய நண்பர்களாகவேயிருந்து வருகிறார்கள். பெரியாருக்கு உடல் நலக்குறைவு என்றால் ராஜாஜி துடிதுடித்துப் போய் விடுவார். உடனடியாகச் சென்று நலம் விசாரிப்பார்; அதேபோல ராஜாஜிக்கு ஒன்று என்றால் பெரியார் அதைத் தாங்கிக்கொள்ளமாட்டார். அத்தகையதொரு பண்பாட்டை இந்த இரு தலைவர்களும் தமிழ் நாட்டில் உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

தந்தைசெல்வாவுடன் தமிழ் நாடு சென்றிருந்த போது இந்த இரு முதிய தலைவர்களையும் சந்திக்க முயற்சியெடுத்தோமாயினும் பெரியார் ஈ. வெ. ரா அவர்களை மட்டுமே சந்திக்க முடிந்தது. ராஜாஜி அவர்கள் எங்கோ விழுந்து காலில் காயம் ஏற்பட்டு படுக்கையிலிருப்பதாகவும்— அதனால் அவரைச்சந்திப்பது சாத்தியமில்லையென்றும் கல்கி அலுவலகத்தில் தெரிவித்தார்கள். சந்தித்துப் பேச முடியாமலிருப்பதற்கு ராஜாஜி அவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளதாகவும் திரு. சதாசிவம் (கல்கி நிர்வாகி) அவர்கள் தெரிவித்தார்.



# (26)

## சட்டக்கல்லூரியில் வட்டுக்கோட்டையின் குரல்

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

ஆனாலும், ராஜாஜி அவர்களை 1971ம் ஆண்டு பொதுத் தேர்தல் சமயத்தில் தமிழ் நாடு சென்றிருந்த போது சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது. அச் சந்திப்பின்போது நடந்த சம்பவங்களை பிறிதோர் சந்தர்ப்பத்தில் தருகிறேன்.

ஃ ஃ

தமிழ் நாட்டு மக்களிடையே சுயமரியாதையுணர்வையும் சுயசிந்தனையையும் தட்டியெழுப்பிய அந்த முதுபெரும் சிங்கத்தை—வெண்தாடிவேந்தரை — அவரது 'விடுதலை' அலுவலகத்தில் சந்திக்கிறோம்.

அறிவு ஒளி விடும் அந்த முகத்தில் புன்னகை மிளிர 'வாங்க' என்று வரவேற்றார் பெரியார் ஈ. வெ. ரா. 94 வயது நிறைந்த அந்த சுயமரியாதைச் சிங்கமும் 72வயது நிரம்பிய ஈழத்துக் காந்தியும் சந்தித்துக் கொண்ட காட்சி மறக்க முடியாத காட்சியாக இருந்தது.

தமிழக மக்களின் சிந்தனையை தட்டியெழுப்பியவர்—தமிழ் நாட்டு மக்களின் விடுதலை உணர்வுக்கு மூலவித்தாக இருப்பவர் — பெரியார் என்றால், ஈழத்தமிழக மக்களின் எழுச்சிக்கும் விடுதலை உணர்ச்சிக்கும் மூலவித்து நம் பெரியவர் அன்றோ?

தமிழ்நாட்டு மக்களின் விடுதலைக்குப் போராடி சிறையில் உயிர்விடவேண்டும் என்பதே தமது ஒரே ஆசை என்று பெரியார் கூறுகிறாரென்றால், ''72 வயதாகிவிட்டது எனக்கு; விடுதலைப்போரில் ஈடுபட்டு, மீதிக்காலத்தை ஜெயிலில் கழிக்கவும் நான் தயார்'' என்று மார்தட்டிக் கூறுபவர் ஈழத்தில் நமது பெரியவர் அன்றோ?

கட்டிலில் சப்பாணி போட்டு உட்கார்ந்தபடியே 'விடுதலை'க்கு ஆசிரியர் தலையங்கம் எழுதிக்கொண்டிருந்த பெரியார் அதை அப்படியே வைத்துவிட்டு, ஈழத் தமிழக மக்களின் பிரச்சினைகளை மிகுந்த ஆதுரத்துடன் கேட்டறிந்தார்.

''ஈழத்தமிழகத்து மக்கள் படும் இன்னல்களைப் பற்றியும் சிங்கள அரசின் கெடுபிடிகளைப் பற்றியும் பத்திரிகைகளில் நம்மால் எழுத முடிகிறதேதவிர, நாம் நினைக்கிற அளவுக்கு செய்வதற்கு தமிழ் நாட்டுக்கு சுதந்திரம் இல்லையே...வெளிநாட்டு விவகாரங்களைக் கவனிக்கும்

(7-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடச்சி)

டம் ஒரு நாளிலோ இரு நாளிலோ முடிந்து விடுவதல்ல—தீவிர போராட்டத்திலீடுபட்டு வியத்தகு சாதனைகளைச் சாதிக்க வேண்டிய பல சந்தர்ப்பங்கள் எதிர்காலத்தில் ஏற்படும்—வாய்ப்புக்கள் பல வரும்—அது போது உங்கள் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு நிச்சயம் 'தீனி' கிடைத்திடும் என்பதுதான்!

எனவே இப்போது நாம் செய்திடவேண்டியதென்ன? கூட்டணித் தலைவர்கள் காட்டுகின்ற வழியில் அக்டோபர் 2ல் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்குவோம்- அதை மக்களிடம் எடுத்துச் செல்வோம்!

'என்னுடையதீர்மானத்தில் பஞ்சாப் கிலாபாத் அநீதிகளுக்குப்பரிகாரம் தேடுவதற்கு மட்டுமே ஒத்துழையாமை மேற்கொள்வதாகக் கண்டிருந்தது. ஆனால் இது ஸ்ரீ விஜயராகவாச்சாரியாருக்கு திருப்தியளிக்கவில்லை.' ஒத்துழையாமை ஆரம்பிப்பதென்றால் குறிப்பிட்ட அநீகளுக்கு மட்டும் அதை ஏன் ஆரம்பிக்க வேண்டும்? நாட்டுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளுக்குள்ளே மிகப் பெரியது சுயராச்சியமின்மையேயாகும். ஆதலின் சுயராச்சியம்தான் ஒத்துழையாமையின் நோக்கமாயிருக்க வேண்டும்' என்று அவர் வாதித்தார். அவருடைய யோசனையை நான் ஏற்றுக்கொண்டேன். என்னுடைய தீர்மானத்தில் சுயராச்சியக் கோரிக்கையையும் சேர்த்தேன்.' 'ஒத்துழையாமை' ஏன் என்பதற்கு மேற் கண்டவாறு பதில்—கூறுகிறார் காந்தியடிகள் தமது 'சத்திய சோதனை' என்னும் நூலில்!

நம்மை அடிமைகொள்ள நினைக்கும் சிங்கள அரசுடன் தமிழ்மகன் எந்த ஒருமுறையிலும் இனி ஒத்துழைக்கமாட்டான் என்பதே ஒத்துழையாமைப் போராட்டத்தின் உள்ளார்ந்த அர்த்தமாகும்! ஒத்துழையாமை இயக்கத்தை ஒவ்வொரு தமிழனும் தனியாகவும் கூட்டாகவும் கொண்டு நடத்திட முடியும்!

அநீதிக்கு, அதர்மத்துக்கு, அநியாயத்துக்கு அக்கிரமத்துக்கு, அடிமைத்தனத்துக்கு ஒத்துழைப்புத்தரமாட்டோம்; என்பதே அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளில் ஈழத்தமிழினம் ஏற்றிடவேண்டிய சபதம் ஆகும்!

நம்முடைய விடுதலைக்கு—நமது உரிமைகளுக்கு போராடும் போது-அநீதியை எதிர்த்துப்போராடும் போது—நிச்சயம் நாம் துன்பங்களை ஏற்றிடத்தான் வேண்டிவரும். அடக்கு முறை குண்டாந்தடியடி, இருட் சிறை, சித்திரவதை, இராணுவத் தாக்குதல், துப்பாக்கிச் சூடு—இப்படிப் பல துன்பங்களை தாங்கித்தான் சுதந்திர தேவியின் அருளை நாம் பெற முடியும்! துன்பங்களைச் சந்திப்பதற்கு நாம் தயாராக இல்லையென்றால், விடுதலைக்காற்றை சுவாசித்திடவும் நாம் அருகதையற்றவர்களாவோம்!

## அரசியல் மடல்

குண்டாந்தடியை எடுத்து—எமைக்
குத்துக்குத்தென்றிட குத்திக்கொன்றாலும்
சுட்டாந்தரையிற் கிடத்திப்—பல
மாமலையர் எமை வைது தின்றாலும்
சுட்டுப் பொசுக்கி உடனே—பல
துண்டுகளாக்கித் துவைத்து உண்டாலும்
கட்டாயம் நாம் தமிழ் காப்போம்—இதைக்
கண்டித்தடிப்பினும் ஏற்றிடமாட்டோம்!

சுட்டாலும் சுட்டுப் பொசுக்கி—எமைத்
துண்டுகளாக்கி அவித்து உண்டாலும்
பட்டாளம் எல்லாம் திரண்டு—பல
பைந்தமிழ் உயிர்களைக்கொண்டுசென்றாலும்
எட்டாத பழமவர் எண்ணம்—இது
எந்தமிழ் காக்கும் உயரிய திண்ணம்
வெட்டாலும் குத்தாலும்வெருளோம் இது
வேறொன்றும் இல்லை—விடுதலை வேட்கை!

என்று இறுமாந்து பாடுகிறார் வந்தாறுமூலையைச்சேர்ந்த தம்பி 'அண்ணா தாசன்'!

அன்னைத் தமிழுக்கு 'சாவுமணி'
அடித்த பின்பும் 'ஆண்டவனே' என்று
பின்னற் கதிரையிலே 'மூச்சு' விட்டு
படுத்துக்கிடப்பதிலே என்ன லாபம்?
திண்ணைப்பிறவியென உன்னை இழிவாக
தம்பியர்கள் நாளை இகழ்வார்கள்!
கண்ணை நிகர்த்த தமிழ் அழிவை நிறுத்திடு
மோர்
போரிற் பங்குகொளவா

என்றழைக்கிறார் கவிஞர் 'மணிக்கவிராயர்!!

எனவே என் தமிழ்த் தோழனே! வருவது வரட்டுமென களத்தில் ஆடப் புறப்படுவோம்—தருவது தலையென்றாலும், தமிழ் ஆட்சியமைத்திடுவோம்! காற்றில் அசைந்தாடும்—நம் உதயசூரியன் கொடி நமது கடமையை நினைவூட்டியபடியே இருக்கிறது.

மீன்பாடும் தேனாட்டில் நமது தந்தை செல்வாவினால் செப்டம்பர் 17ம் நாள் முதன் முதலாக ஏற்றப்பட்ட நமது சுதந்திரக் [illegible]—[illegible] கொடியான [illegible] — ஈழத்தமிழ் நாடெங்கும் சிற்றூர், பேரூரெங்கும் அக்டோபர் 2ம் நாளிலிருந்து உயர்த்தி வைப்போம். கடைகள், தனியார் கட்டிடங்கள், இல்லங்கள், படிப்பகங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் எங்கும் உதய சூரியன் கொடி உயரப்பறக்கட்டும். அது நமது சுதந்திர உணர்ச்சியை விடுதலைக் கிளர்ச்சியை உலகெங்கும் பறைசாற்றும் உன்னத சின்னமாக விளங்கட்டும்!

ஆகவே நண்பா—

ஆறு அம்சக் கோரிக்கையை உதாசீனம் செய்து தமிழினத்தை அவமதித்த ஆட்சியாளர்களுக்கு தமிழர்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பை எடுத்துக்காட்டிட —

ஈழத்தமிழினம் சுயநிர்ணய சுதந்திரப் போராட்டத்தில் குதித்துவிட்டதென்பதை உலகெங்கும் பிரகடனப் படுத்திட—

சிங்கள ஆட்சியாளருடன் ஈழத்தமிழினத்தின் ஒத்துழையாமைப் போர் ஆரம்பமாகிவிட்டதென்பதை எடுத்துக் காட்டிட

அக்டோபர் 2ல் தமிழ் ஈழமெங்கும் பரிபூரண ஹர்த்தால் அனுட்டிப்போம்! மே 22 ஹர்த்தால் போன்றே இதையும் வெற்றிபெறச் செய்திடுவோம்!

- மாணவ மாணவியரே பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் அக்டோபர் 2ல் செல்லாதீர்!
- பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பாதீர்!
- பெரியோரே, இளையோரே, அன்று வேலைகளுக்கும் வேறு தொழில் களுக்கும் செல்லாதீர்!
- வணிகர்களே! உங்கள் கடைகளையும், தொழில் நிலையங்களையும் பூட்டி வைப்பீர்!

என்று தமிழர் கூட்டணி விடுத்துள்ள வேண்டுகோளை நிறைவேற்றிடுவோம்!

அக்டோபர் 2ல் ஈழத்தமிழகம் முழுவதும் செயலிழந்து வெறிச்சோடிக்கிடக்கட்டும்! அது கண்டு தமிழினத்தின் ஒற்றுமையை நினைத்து அம்மையாட்சி கதி கலங்கட்டும்! அக்டோபர் 2லிருந்து தமிழர் விடுதலைப் போராட்டம் விரைவு பெறட்டும்!!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக சித்த மருத்துவக் கண் காட்சி மதுரையில் 17, 18-4-71ல் நடை பெற்றபொழுது நாங்கள் இவ்விடமிருந்து அனுப்பிய மருந்துகளைப் பரிசோதித்து சிறந்த முறையில் தயாரிக்கப்பெற்ற மருந் துகள் என பாராட்டி "மருத்துவ மன் னன்" எனும் அணிமுறைப் பட்டமும் கிடைக்கப் பெற்றவர்.



வைத்தியராஜ் K. சிவசுப்பிரமணியம்
M. I. H. Ind. S. M P.

## சிவா ஜீவாம்ருதம் A. D. SYRUP

பலவிருத்தி டானிக்

ஆண், பெண் இரு பாலாருக்கும் கை கண்ட ஒளஷதம் இரத்த சுத்திக்கும், இரத்த விருத்திக்கும் நரம்புத் தளர்ச்சி, முதுகு வலி, கைகால் நடுக்கம், பசி இன்மைக்கும் இன்றியமை யாதது. பாண்டு, சோகைக்கும் வயது வித்தியாசமின்றிப் பாவிக்கலாம்.

புட்டி ஒன்றுக்கு
ரூ. 12-50

## சித்தர் கேசரி தைலம்

ஆயுர்வேத முறைப் படி தயாரிக்கப்பட்ட கேசரி, பச்சை மூலி கைகளால் பக்குவ மாய்த் தயாரிக்கப் பட்டு, பீனிசம், தலை வலி, கண் மங்கல், காது நோய்களை நீக்கி, மூளைக்குக் குளிர்ச்சி யையும் இளநரை மயிர் அகற்றி, கருமை உண்டாக்கி, அடர்ந்து நீண்ட கூந்தலையும் வளர்க்கும் சித்தர் கேசரி.

புட்டி ரூ- 3-75
பெரியது ரூ- 7-00

## சுவர்ண சஞ்சீவி லேகியம்

மலச்சிக்கலுடனும் கடுப்பு, இரத்தம் இவைகளுடனும் மலம் வெளியாகுதல், கிருமிகள் அதிகரித்து அரிப்பு, மூல முளைகள் எரிவு, வாய்வு, பித்த மயக்கம் வயிற்றுவலி, பசி யின்மை, இடுப்பு வலி, ஆசனவாய்க் கடுப்பு இவைகளைக் குணமாக்கி சுக -மாக மலசுத்தியாகும். காலையிலும், இரவிலும் ஆதாரத்துக்குப் பின் நெல்லிக்காய் பிரமாணம் சாப்பிட்டு பால் அல்லது தண்ணீர் சாப்பிடவும். பத்தியம் இல்லை. ஆண் — பெண் இருபாலாரும் சாப்பிடலாம்.

விலை ரூ. 5-00 பெரியது ரூ. 9-00

# உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

## எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, பிற வைத்தியம் செய்து குணப்படாமல் கைவிடப்பட்டதானாலும் சரி, ஊசியேற்றிக் குணப்படாமலிருந்தாலும் சரி இனி காலதாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி சிரங்கு, பாண்டு, சோகை, காக்கைவலிப்பு, வாதம், நீரழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்பு வலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பனஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன்பின் காணுதல், சூதக வலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்-

வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

## சிவா படை மருந்து

படை, பற்று, சொறி, ஊரல், நமச்சல் முதலிய வியாதிகளுக்கு சிறந்த மருந்து—இரண்டு மூன்று தடவை பூசிவர குணமடையும்—

விலை ரூ. 2-50

# மதன சஞ்சீவி லேகியம்

(ஆண்களுக்கு மட்டும்)

வாலிப, வயோதிப அன்பர்களே! உங்கள் உடல் நலனைச் சிறிது சிந்தித்து, சிறு வயதிலும், வாலிப வயதிலும் தெரிந்தும், தெரியாமலும், தவறான நட்பாலும் செய்கிற தவறுதல்களே இப்போது உங்களின் தசை, நாடி, நரம்பு முதலிய சப்த தாதுக்கள் கெட்டு, நஷ்டமடைந்து, இரத்தக் குறைவு, சோர்வு, கண் எரிவு, தளர்ச்சி, கெட்ட கனவுகள், அடிக்கடி சிறுநீர் உறுப்புக்கள் தளர்ச்சி, எடை குறைவு, முதுகு, கை, கால் மூட்டுக்களில் வலி, பலஹீனம், பீதி, பயம், வெறுப்பு உண்டாகி தாய், தந்தையரிடமும் சொல்ல முடியாமல் மனவேதனையும் கஷ்டமும் அடைந்து நிம்மதி இல்லாமல் வாழ்கின்றீர்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், பலரிடம் வருடக் கணக்கிலும் சிகிச்சை பெற்றும் ஒரு பலனும் இல்லாமல் ஏமாந்தவர்களும் இனிக் கவலைப்பட வேண்டாம்.

வியாதியஸ்தர்கள் எமது மதன சஞ்சீவி லேகியத்தை ஒரு புட்டி உபயோகிக்கும் பொழுதே பலனைக் காணலாம். எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் நாடி நரம்புகள் பலமடைந்து, புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று வாழலாம். எடை கூடியவர்களும், நீரழிவு (ப்ளட் பிரசர்—Blood Pressure) பித்தக் கொதிப்பு உள்ளவர்களும் சாப்பிடலாம் ருசியானது; நம்பிக்கையானது; பத்தியமில்லை. ஒரே புட்டியில் குணம் காணலாம். இழந்த சக்தியை மீட்டு வீரியத்தையும் தேக வளர்ச்சியையும் தரும். குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம்.

எமது முருகானந்தா வைத்தியசாலையின் இணையற்ற தயாரிப்பான மதன சஞ்சீவி லேகியம் சக்தி வாய்ந்த மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

ஒரு ருத்தல் ரூபா 23-00. அரை ருத்தல் 12-00 வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

## "மதன லேபனம்"

ஜீவநரம்புகளின் பலவீனத்தைப் போக்க சிறந்த ஒளஷதம்.
வெளிப்பூச்சு மருந்து விலை ரூபா 5-50

எந்த வியாதியாக இருந்தாலும் சரி என்னைக் கலந்து ஆலோசியுங்கள்.
உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

# அமிர்த சஞ்சீவி லேகியம்

ஜீரண சக்தியை சீர்திருத்தி இரத்தக் குறைவினால் உண்டாகும் தலைவலி, மயக்கம், கண்கள் இருண்டு வருதல், இடுப்பில் வலி, மற்றும் காய்ச்சல், இன்னும் இதர வியாதிகளுக்குப் பின் உண்டாகும் கேச உதிர்வை நிறுத்தி சகல பலஹீனத்தையும் போக்கி முகவசீகரத்தையும், பழைய உற்சாகத்தையும், சக்தியையும் மீண்டும் அளிக்கிறது அமிர்த சஞ்சீவி லேகியம்.

இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதது. விலை ரூபா 15-00

# சிவா கபஹரசிரப்

ஈளை, இளைப்பு, இருமலுக்கு ஒப்பற்ற நிவாரணி, சிறியோர் முதல் பெரியோர் வரை வயது வித்தியாசமின்றிப் பாவிக்கலாம். மூச்சுவிட முடியாமல், கண் பிதுங்கி கழுத்து ஸ்தம்பித்து, கால் கைகள் தள்ளாடி, உடம்பில் வியர்வை பெருகி, ஏது செய்வதென்று தெரியாமல் தத்தளிக்கும் ஒருவர் எமது ஒளஷதத்தைச் சாப்பிடுவாராகில், அப்பொழுதே சுகம் பெற்று மூச்சு தாராளமாய் விட ஏற்பட்டு, ஆனந்த பரவசமாவார். பரீட்சியுங்கள். இம்மருந்தின் முக்கிய குணம் கபத்தைச் சேர்க்காமல் கண்டிக்கும் கர்குர் என்னும் சப்தத்தைப் போக்கும். சுவாசத் தடையை அதிசீக்கிரத்தில் மாற்றும்.

விலை ரூ. 10-50 வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும்.

## முருகானந்தா வைத்தியசாலை,

104, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2வது வாரம் காட்சியளிக்கிறது

சென்ட்ரல்

திரையில்

சிவாஜி ஜமுனா

நாகேஷ் எம். ஆர். ராதா

—நடித்த—

நிச்சய

தாம்பூலம்

வெகு விரைவில்

சிவாஜிகணேசன்

ஜெயலலிதா

எம். ஆர். ஆர். வாசு

மனோரமா

வி. கே. ராமசாமி

—நடித்த—

பட்டிக்காடா

பட்டணமா?

5வது வெற்றி வாரம் கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்) லிடோ (யாழ்நகர்)



அகில இந்திய சிறந்த நடிகர் விருது பெற்ற

பாரத் எம். ஜி. ஆர்.

ஜெயலலிதா — அசோகன் — மனோகர்

லக்ஷ்மி — சோ

மற்றும் பலர் நடித்த

கே. சி. பிலிம்ஸ்

குமரிக்கோட்டம்

இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணச் சித்திரம்) இயக்குநர்: ப. நீலகண்டன்

எம். எஸ். சுப்புலக்ஷ்மி திரைப்பட விழா!

செல்லமகால்

இப்பொழுது காட்சியளிக்கிறது

எம். எஸ். சுப்புலக்ஷ்மி

வை. வி. ராவ்

ஷாந்தா ஆப்டே

—நடித்த—

சாவித்திரி

அடுத்து எதிர்பாருங்கள்

எம். எஸ். சுப்புலக்ஷ்மி

ஜி. என். பாலசுப்பிரமணியம்

என். எஸ். கிருஷ்ணன்

துரைராஜா

—நடித்த—

சகுந்தலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1972ம் வருடம் அக்டோபர் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.